அரச அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டு நாணயமாற்று நிறுவனம்
சாரங்கா நகை மாடம்
MONEY EXCHANGE
ALL COUNTRIES
WESTERN UNION WU
moving money for better
021 221 7007
இல.157/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: 16

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விழயல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஆடி 10 வியாழக்கிழமை 26.07.2018 | கதிர் 262



# தமிழ் அரசியல்வாதிகளின் உள் முரண்பாடுகளினால் அபிவிருத்திக்குப் பாதிப்பு

## ஆளுநர் குரே விசனம்

யாழ்ப்பாணம், ஜூலை 26

தமிழ் அரசியல்வாதிகளுக்குள் நிலவும் முரண்பாடுகள் தமிழ் மக்களுக்கு அபிவிருத்தியை - சேவையை - ஒருபோதும் கொண்டுவரா என வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே விசனத்துடன் தெரிவித்துள்ளார்.

பக்கம் 14 »



## மரணதண்டனை விவகாரத்தில் ஜனாதிபதி விட்டுக் கொடார்!

### அடித்துக் கூறுகிறார் அமைச்சர் ராஜித

கொழும்பு,ஜூலை26

எந்தத் தடை வரினும் அதனை எதிர் கொண்டு மரண தண்டனையை நடைமுறைப்படுத்துவதில்ஜனாதிபதி உறுதியுடன் இருக்கிறார் என அமைச்சரவை இணைப் பேச்சாளர் ராஜித சேனரத்ன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை பக்கம் 14 »

## சாவகச்சேரிப் பகுதியில் 2 இடங்களில் வாள்வெட்டு

### தங்க நகைகளும் கொள்ளை

யாழ்ப்பாணம், ஜூலை 26

சாவகச்சேரிப்பிரதேசத்தின் இரு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட வாள் வெட்டுச் சம்பவங்களில் இருவர் காயமடைந்துள்ளனர்.இந்தச் சம்பவங்கள் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றுள்ளன என சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர்.

பக்கம் 14 »

## விக்கியை ஓரங்கட்டப் பெரும் சதி சீறுகின்றார் ரெலோவின் விந்தன்



- எஸ்.நிதர்ஷன் -

தமிழ் மக்களுக்காகச் சரியான பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்ற வடக்கு மாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரனை வீழ்த்துவதற்கும் அவரை அரசியலில் இருந்து ஓரங்கட்டுவதற்குமான திட்டமிட்ட சதி வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ அமைப்பின் முக்கியஸ்தரும் வடக்கு மாகாண சபையின் உறுப்பினருமான விந்தன் கனகரத்தினம் தெரிவித்துள்ளார்.

பக்கம் 14 »

## சிங்களத் தேசிய வாதத்தின் ஓர் அங்கம்தான் கூட்டமைப்பு

### சாடுகிறார் கஜேந்திரகுமார்



யாழ்ப்பாணம், ஜூலை 26

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிங்களத் தேசிய வாதத்தின் ஓர் அங்கமாகச் செயற்படுவதாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுப் புதன் பக்கம் 14 »

### இனி - இது - ரகசியம் அல்ல!

தமிழ்ப் பிரதேசங்களிலும் வெளிச்சம் காட்டப் போகின்றாராம் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ.

தமது 'எலிய' (வெளிச்சம்) என்ற அமைப்பின் பக்கம் 03 »

## தொலைத்தொடர்பு கோபுரத்தில் ஏறி திருடியோர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 26

தனியார் தொலைத்தொடர்புக் கோபுரத்தில் ஏறி மின்னல் பக்கம் 14 »

## கல்விசார் ஊழியர்களின் போராட்டம் கைவிடப்பட்டது

கொழும்பு, ஜூலை 26

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை ஆசிரியர், அதிபர் சங்கங்கள் இணைந்து இன்று வியாழக்கிழமை முன்னெடுக்கத் திட்ட பக்கம் 14 »

## அதிபர், ஆசிரியர் நியமனங்களை இடைநிறுத்த ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு ஜூலை 26

இலங்கை அதிபர் சேவை, ஆசிரியர் சேவை நியமனங்களை இடைநிறுத்தும் உத்தரவை கல்வி அமைச்சுக்கு வழங்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால பக்கம் 14 »



# இலங்கையுடன் சீன, இந்திய முறுகலைத் தவிர்க்கவே ஒன்றுக்கு – துறைமுகம்; மற்றதற்கு – விமானத்தளம்




கொழும்பு, ஜூலை 26

சீனாவுக்கும் இந்தியாவிற்கும் இடையில் முறுகல் நிலையை தவிர்க்கும் நோக்கமாகவே தெற்கில் அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவிற்கும் மத்தள விமானநிலைய செயற்பாடுகளை இந்தியாவுக்கும் வழங்க அரசாங்கம் தீர்மானித்தது என அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறியுள்ளார்

அரச திணைக்களத்தின் கேட்போர்கூடத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறைஅமைச்சரும்அமைச்சரவை துணைப்பேச்சாளருமான டொக்டர் ராஜித சேனாரத்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியாவிற்கு மத்தள விமான நிலையத்தின் செயற்பாடுகளை வழங்குவதால் சீனாவுக்கும் இந்தியாவிற்கும் இடையில் முறுகல் நிலை ஏற்படுமல்லவா? என்று செய்தியாளர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

மத்தள விமானநிலையத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை கருத்தில் கொண்டு அதன் செயற்பாடுகளை இந்தியாவிற்கும் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் அபிவிருத்தியை கருத்தில்கொண்டு அதன் செயற்பாடுகளை சீனாவிற்கும் வழங்கப்பட்டுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அம்பாந்தோட்டை துறைமுகத்தின் மூலம் வருமானம் பெறும் வழிகளில்கவனம்செலுத்தவில்லை. விசேடமாக இங்கு கப்பல்களை வரவழைப்பதிலும்கப்பல்களுக்கு எரிபொருள் வழங்கும் செயற்பாடுகளிலும் கவனம் செலுத்தவில்லை.

அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு அப்பால் 200 கடல் மைல் தொலைவில் முக்கிய கப்பல்கள் பயணிக்கின்றன. இவற்றுக்கு எரிபொருள் தேவைகளை அத்துறைமுகத்தின் மூலம் மேற்கொள்ளமுடியும்.

உரியமுறையில் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டுஆரம்பிக்கப்படாத அபிவிருத்திதிட்டங்களை இன்று சமகால அரசு சீனாவில் உதவியுடன் சிறந்தமுறையில் மேற்கொண்டு வருகின்றது என்றும் அவர் கூறியுள்ளார்.

## 75 லட்சம் அமெரிக்க டொலர்கள் முதலீட்டில் வடக்கில் மீன் ஏற்றுமதி கைத்தொழில் பேட்டை

ஏற்றுமதிக்கான மற்றுமொரு மீன் உற்பத்தி தொழில் பேட்டை ஒன்று வட மாகாணத்தில் அமைக்கப்படவுள்ளது.

இதற்காக கடற்தொழில் நீர்வள அபிவிருத்தி கிராமிய பொருளாதார தொடர்பான இராஜாங்க அமைச்சர் திலீப் வெத ஆராச்சி இந்திய முதலீட்டாளர்களுடன் பேச்சு நடத்தி வருகிறார். இது தொடர்பாக குறிப்பிட்ட முதலீட்டாளர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சருக்கு இடையில் விசேட பேச்சுவார்த்தை ஒன்று தேசிய நீரியல்வள அபிவிருத்தி அதிகார சபையில் நடைபெற்றுள்ளது.

இந்த பேச்சில் இந்திய முதலீட்டாளர்கள் கருத்து தெரிவிக்கையில், அமெரிக்க உள்ளிட்ட நாடுகளுக்கு ஏற்றுமதிக்காக உலகில் ஆகக்கூடிய கோரிக்கையை இலங்கை இறால், நண்டு உள்ளிட்ட வகைகளுக்கு உண்டு.

இந்த உற்பத்தி துறையில் 75 லட்சம் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்வதற்கு தாம் விருப்பம் கொண்டுள்ளோம் என இதன்போது சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தயாரிப்பு தொழிற்சாலை பேட்டை ஒன்று சுமார் 500 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படவுள்ளது.

இதனூடாகபுதிதாக800பேருக்கு தொழில்வாய்ப்புக்களும் மறைமுகமாக 2000 பேருக்கு மேற்பட்டோருக்கான தொழில்களை பெற்றுக்கொள்ளும் வகையில் இந்த திட்டம் அமையவுள்ளது.

இந்த முதலீட்டுக்கான திட்ட அறிக்கை ஒரு வார காலத்துக்குள் இராஜாங்க அமைச்சர் திலீப் வெத ஆராச்சிக்கு சமர்ப்பிப்பதற்கு சம்பந்தப்பட்ட முதலீட்டாளர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

## வவுனியாவில் கடந்த 7 மாதங்களில் 29 தற்கொலை முயற்சி

வவுனியா, ஜூலை 26

வவுனியா மாவட்டத்தில் கடந்த 7 மாதங்களில் தவறான முடிவெடுத்து 29 பேர் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர் என வவுனியா வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

2018 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் ஜூலை 25 வரையான காலப்பகுதியில் தற்கொலைக்கு முயன்ற நிலையில் 29 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இதன்படி 20 பெண்களும், 09 ஆண்களும் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் காதல் விவகாரம், குடும்ப பிரச்சினை, கடன் தொல்லை, பெற்றோருடன் முரண்பாடு என பல்வேறு காரணங்களால் தவறான முடிவெடுத்து தற்கொலைக்கு முயன்றுள்ளனர் என வவுனியா வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் இளைஞர், யுக்திகளே அதிகம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க - 100)

## கிளிநொச்சியில் வடக்கு கல்வி அமைச்சின் நடமாடும் சேவையால் 48 பிணக்குகளுக்கு தீர்வு





வடக்கு மாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெற்று வருகின்ற நடமாடும் சேவையில் கிளிநொச்சி மாவட்டத்தில் 48 பிரச்சினைகள் முன்வைக்கப்பட்ட நிலையில் அவற்றுக்கு தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் க.சர்வேஸ்வரனின் வழிகாட்டுதலுடனும் பங்கு பற்றுதலுடனும் வடக்கு மாகாண மாணவர்களுக்கு வினைத்திறனான கல்வியை வழங்கும் நோக்கில் இந்த நடமாடும் சேவை செயல்படுத்தப்பட்டுள்ளது.

க.பொ.த சாதாரணதர மாணவர்களின் பரீட்சை பெறுபேற்று அடைவு மட்டத்தை உயர்த்துவதற்கான செயலமர்வும், அதிபர், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்களின் நிர்வாக ரீதியிலான பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் வகையில் நடத்தப்பட்டது கல்வி அமைச்சின் நடமாடும் சேவை நேற்று முன்தினம் கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் குயின்ரன் தலைமையில் நடைபெற்றது.

முன்னதாக காலை 9.00 மணி தொடக்கம் மதியம் 2.00 மணி வரையும் 2018 ஆம் ஆண்டில் க.பொ.த சாதாரணதர பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் மாணவர்களின் பரீட்சை அடைவு மட்டத்தை உயர்த்துவதற்கான வழிமுறைகள் அடங்கிய செயலமர்வு இடம்பெற்றது. இதில் கிளிநொச்சிகல்விவலயத்தில்உள்ள க.பொ.த சாதாரண தர வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகளின் அதிபர்கள் கலந்து கொண்டனர்.

அதிபர்களுக்கான செயலமர்வு நிறைவடைந்ததும் கிளிநொச்சி கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்களின் நிர்வாக ரீதியிலான பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் மாகாண கல்வி அமைச்சின் நடமாடும் சேவை இடம்பெற்றது. இந்த நடமாடும் சேவைக்கு 48 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று அவை அனைத்துக்கும் உடனடியாக தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆதிபர்களுக்கான நேற்றைய செயலமர்வில் வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன், மாகாண கல்விப்பணிப்பாளர் உதயகுமார், மாகாண பிரதிக் கல்விப்பணிப்பாளர் பிரட்லி, கல்வி அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் அனந்தராஜ், கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் குயின்ரன் ஆகியோரும் மாலை நடைபெற்ற நடமாடும் சேவையில் மேற்குறிப்பிட்ட அதிகாரிகளுடன் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சத்தியசீலனுடன் மாகாண கல்வி அமைச் சின் அதிகாரிகள், மாகாண கல்வித் திணைக்கள அதிகாரிகள், கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டு தமது சேவைகளை வழங்கினர்.

(க - 70)

## வவுனியாவில் வறட்சியால் 1,825 குடும்பங்கள் பாதிப்பு

வவுனியா, ஜூலை 26

வவுனியா மாவட்டத்தில் வறட்சி காரணமாக 1825 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 583 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

தொடரும் வறட்சியான காலநிலை காரணமாக வவுனியா பிரதேச செயலக பிரிவில் 238 குடும்பங்களைச் சேர்ந்த 720 பேரும், வவுனியா தெற்கு பிரதேச செயலக பிரிவில் 78 குடும்பங்களைச் சேர்ந்த 257 பேரும், வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவில் 115 குடும்பங்களைச் சேர்ந்த 446 பேரும், வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் 1394 குடும்பங்களைச் சேர்ந்த 5160 பேருமாக 1825 குடும்பங்களைச் சேர்ந்த 6583 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு தேவையான குடிதண்ணீர் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது என மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

வவுனியாவில் மழை இன்மை காரணமாக இப்பகுதிகளிலுள்ள குளங்கள், கிணறுகளில் தண்ணீரின் மட்டம் குறைந்தளவில் காணப்படுகின்றது.

இதனால் குடிதண்ணீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மழை இன்மையால் மேலும் பல பகுதிகளில் குடி தண்ணீருக்கு தட்டுப்பாடு ஏற்படுவதற்கு வாய்ப்புக் கள் அதிகளவில் காணப்படுகின்றன என மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது. (க - 100)

## போதைப் பொருள் பாவனைக்கு ஒத்துழைக்கும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை

போதைப் பொருள் பாவனைக்கு ஒத்துழைப்பு வழங்கும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு எதிராக கடுமையான தண்டனை வழங்கப்படும் என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

போதைப் பொருள் குற்றச்சாட்டின் கீழ் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளவர்களுக்கான தண்டனைகள் விசேட சந்தர்ப்பத்தில் மாத்திரமே நிறைவேற்றப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

# கொழும்பு அரசின் மீதுதான் சுமந்திரனுக்குக் காதலாம்!

## தமிழ் மக்கள் மீது அல்ல என்கிறார் கஜேந்திரகுமார்

- எஸ்.நிதர்ஷன் -

தமிழ் மக்களினது உரிமைகளைக் கைவிட்டு அரசிற்கு நேர்மையான விசுவாசிகளாகச் செயற்படுவதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நோக்கமெனத் தெரிவித்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கூட்டமைப்பின் நாடாளுமன்றஉறுப்பினர் சுமந்திரனுக்கு கொழும்பின் மீதே காதல் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

சமகால அரசியல் நிலைமைகள் குறித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, நீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்தினால் மாகாணசபையில் ஏற்பட்டிருக்கும் அமைச்சர் பிரச்சினையைத் தீர்க்கலாமென்றும், ஆனால் அமைச்சர்கள் விடயத்தில் முதலமைச்சர் பாசாங்கு காட்டுகிறார் எனவும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறியுள்ளமைதொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளிக்கையிலேயே கஜேந்திரகுமார் மேற்கண்டவாறு தெரிவித்தார். இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

மாகாணஅமைச்சர் ஒருவரை முதலமைச்சர் நீக்கியிருந்தார். இதனை எதிர்த்து டெனிஸ்வரன் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் சுமந்திரன் டெனிஸ்வரனுக்காக வாதாடினார்.

இதில், மாகாணசபையில் ஓர் அதிகாரமும் இல்லை, முழு அதிகாரமும் ஆளுநரின் கையில் தான் இருக்கிறது என்றும் முதலமைச்சர் இவ்வாறானதொரு முடிவை எடுக்கமுடியாது என்றும் டெனிஸ்வரன் கூறுகிறார். அதைத்தான் அந்தத் தீர்ப்பும் சொல்லியுள்ளது.

சுமந்திரன் முற்று முழுதாக சிங்கள தேசியவாத நிகழ்ச்சி நிரலில்தான் இயங்குகின்றார். அதனால் முதலமைச்சருக்கான அதிகாரங்களை ஆளுநருக்கு கொடுக்கலாம் என்கிறார். அவ்வாறான அதிகாரங்கள் ஆளுநருக்குதான் இருக்கின்றன என்ற 'அடிப்படையில்' அரசியலை நடத்துவதில் சுமந்திரன் தரப்புக்கு எந்தவிதமான பிரச்சனையும் இல்லை.

ஆதனால்தான், தீர்ப்பும் அதனைச் சொல்லியுள்ளதால், அந்தத் தீர்ப்பைஏற்றுக் கொண்டால்ஒரு பிரச்சினையும் இல்லை என்று சுமந்திரன் கூறுகிறார். அவரைப் பொறுத்த வரையில் உண்மையான காதல் கொழும்போடுதான் இருக்கிறது. தமிழ் மக்களோடு அல்ல.

ஆக, கொழும்பில் இருக்கின்ற ஆட்சியோடுதான் அவருக்குக் காதல் இருப்பதால் அவர்களின் விருப்பத்தின்படி, அவர்களின் சட்டத்தை ஏற்று, இங்கு தமிழ் மக்களுக்குரிய உரிமைகள் எல்லாம் கைவிட்டு, அவர்களுக்காக நேர்மையான விசுவாசியாகச் செயற்படுவதே அவரதும் கூட்டமைப்பினதும் நோக்கம். அதனை சுமந்திரன் முட்டாள்தனமாக மிக வெளிப்படையாக கூறியிருக்கின்றார். - என்றார்.

# தியாகி அறக்கொடை நிலையத்தின் மற்றொரு அறப்பணி நடவடிக்கை



சுவிஸில் இருக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வாமதேவன் தியாகேந்திரன் தனது சொந்த நிதியில் வடக்கில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு காணியுடன் 1000 வீட்டுத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக 60 பயனாளிகளுக்கான வீட்டுத்திட்டத்திற்கான காணிகளை யாழ். கோப்பாயில் வாங்கியுள்ளார். பயனாளிகளைத் தெரிவு செய்து விரைவில் 60 பேருக்கான வீட்டுத்திட்டத்தை வழங்கவுள்ளார். இதனைத் தொடர்ந்து ஏனைய இடங்களில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீட்டுத்திட்டத்தை வழங்குவதற்கான காணிகளை தெரிவுசெய்து வாங்கும் செயற்பாட்டில் இறங்கியுள்ளார். இதுவரை காலமும் வீட்டுத்திட்டம் கிடைக்காதவர்கள் தன்னுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவித்துள்ளார்.

இவர் யாழ்ப்பாணத்தில் தியாகி அறக்கொடை நிலையம் ஒன்றை நடத்தி அதனூடாக போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 20 வருடங்களுக்கு மேலாக பணம், பொருள் உதவிகளை வழங்கி வருகிறார். கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டு வடக்கில் 300 இற்குமேற்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு உதவிகளை வழங்கி வருகிறார். மேலும் போரால் பாதிக்கப்பட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கும் கல்வியைத் தொடர்வதற்கான மாதாந்த பணத்தை வழங்கி வருகிறார்.

கணவனை இழந்து குடும்ப தலைமைத்துவத்தைக் கொண்ட பெண்களுக்கு வாழ்வாதார உதவிகளையும் வயதுமுதிர்ந்தவர்களுக்கு மாதாந்த பணக்கொடுப்பனவையும் இலவச மருத்துவ முகாமையும் நடத்தி வருகிறார். வருடத்தில் 6கோடி ரூபா பணத்தை மக்களுக்கு வழங்கிவரும் இவர் வீட்டுத்திட்டத்தையும் தற்போது ஆரம்பித்துள்ளார்.

தான் பிறக்கும் போது ஒன்றுமே இல்லாது பிறந்ததுபோல தான் இறக்கும் போதும் தன்னிடம் ஒன்றுமே இல்லாது இறக்க வேண்டும் என்று சொல்லும் இவர், தனது தொழிலில் வரும் வருமானம் முழுவதையும் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவேன் என்று உறுதியுடன் கூறுகின்றார்.

# புலிகளை அழித்தோம் என மார் தட்டுவோரால் வாள்வெட்டுக் கும்பலை ஏன் அடக்க முயவில்லை?

## ரெலோ விந்தன் கேள்வி

- எஸ்.நிதர்ஷன் -

தமிழ் மக்களின் அடி நாதமாக விளங்கும் யாழ்ப்பாணத்தைச் சீர்குலைக்கும் வகையிலேயே இங்கு குற்றச் செயல்கள் திட்டமிட்டு அரங்கேற்றப்படுகின்றன எனத் தெரிவித்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ அமைப்பின் முக்கியஸ்தரும் வடக்கு மாகாண சபையின் உறுப்பினருமான விந்தன் கனகரத்தினம், உலகிலேயே பலம் வாய்ந்த அமைப்பாகக் கருதப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்து விட்டோம் என மார்தட்டுகின்ற இலங்கை அரசினால் வாள்வெட்டுக் கும்பலை ஏன் கட்டுப்படுத்த முடியவில்லை என்று கேள்வியெழுப்பியுள்ளார்.

சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் யாழ் ஊடக அமையத்தில் நேற்று மதியம் தாம் நடத்திய ஊடக சந்திப்பின் போதே விந்தன் கனகரட்ணம் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ் மாவட்டத்தில் கொள்ளைகள், வாள்வெட்டுச் சம்பவங்கள் போன்ற குற்றச் செயல்கள்அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றன. இவை தொடர்பில் கடந்த வாரங்களில் சட்டம், ஒழுங்கு அமைச்சரும் பொலிஸ்மா அதிபரும் யாழ் வந்து ஆராய்ந்திருந்தனர். அத்தோடு இவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பிட்டிருந்தனர். ஆனாலும் அத்தகைய குற்றச் செயல்கள் தொடர்ந்தும் இடம்பெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன.

முன்னொரு காலத்தில் நாட்டையும் மக்களையும் மண்ணையும் கலை, கலாச்சாரத்தையும் பாதுகாப்பதற்காக மன்னர்கள் வாள் ஏந்தினார்கள். ஆனால் தற்போது எங்கள் மக்களை தாக்குவதற்காக வாள் ஏந்துகின்ற துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

இந்த நாட்டில் 25 மாவட்டங்கள் இருக்கின்ற போது யாழ் மாவட்டத்தில் மட்டும் இவ்வாறான குற்றச் செயல்கள் நடைபெறுகின்றமை ஏன்? இவை தொடர்ச்சியாக அரங்கேறுவதன் பின்னணி என்ன? இத்தகைய நிலைமைகள் எமக்குப் பலத்த சந்தேகத்தை தற்போது ஏற்படுத்துகின்றன.

இங்குள்ள இளைஞர்களை மது போதை மற்றும் போதை வஸ்துக்களுக்கு அடிமையாக்கி அவர்களின் சிந்தனைகளில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கிலான செயற்பாடுகளே இங்கு முன்னெடுக்கப்படுகின்றன. இதனூடாக எமது இளைஞர்களை திசை திருப்பி, மக்களை அச்சத்தில் வைத்திருந்து, கல்வி, கலாச்சாரத்தை அழித்து நமது இருப்பை இல்லாமல் செய்வதற்கான சதி முயற்சியாகவே இதனை நாம் பார்க்கின்றோம்.

தமிழர் வாழ்வின் அடிநாதமாக விளங்கும் யாழ்ப்பாண மண்ணிலே இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பதனூடாகத் தாம் நினைக்கின்ற பலவற்றைச் சாதிக்கலாமென பெரும்பான்மைஇனத்தவர்கள் கருதலாம். இதற்குப் பின்னால் இருப்பவர்கள் யார் என்பதை நோக்குவோமாக இருந்தால் இதன் ஏவலாளிகள், பொறுப்பாளிகள் அரசாங்கமாகவே இருப்பதைக் காண்போம். யாழில் சட்டம் ஒழுங்கு சீரான முறையில் இருப்பதாகத் தொடர்ந்தும் அரசு கூறினாலும் வன்முறைகள் தொடர்ந்து நடந்து கொண்டு தான் இருக்கின்றன.

ஆகவே இவை குறித்து அனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதற்கு முழுக்க முழுக்க அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும். உலகிலேயே வலிமை மிக்க இயக்கமாகக் காணப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்தோம் என மார் தட்டுகின்ற இலங்கை அரசினால் ஏன் இந்த வாள்வெட்டுக் கும்பலைக் கட்டுப்படுத்த முடியாதிருக்கின்றதென்ற கேள்வி எழுகின்றது.

இவற்றையெல்லாம் ஆழமாகச் சிந்தித்துப் பார்ப்போமாக இருந்தால் இதன் பின்னணி பலத்த சந்தேகங்களையே ஏற்படுத்தும். இவ்வாறான நிலைமைகள் தொடர்வதால் எமது மக்களுக்கு பலத்த பாதிப்புக்களையே எதிர்காலத்தில் ஏற்படுத்தும். ஆகவே நாம் எமது கலை, கலாசார, பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களையும் இருப்பையும் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். இதற்கமைய நாம் அனைவரும் இதனை விளங்கிக் கொண்டு ஒன்றாக இணைந்து பயணிக்க வேண்டும். - என்றார்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளைவடக்கு, கிழக்குப் பிரதேசத்துக்கும்அவர்விரிவுபடுத்தப் போகின்றார் என்ற அவரது உத்தேசத்திட்டத்தைத்தான் நான் இப்படிசிலேடையாகக்குறிப்பிட்டேன்.

கடந்த வாரம் நுவரெலியாவில், மலையகத் தமிழர் மத்தியில், 'எலிய' அமைப்பின் பெயரால் தாம் நடத்திய கூட்டத்துக்குப் போதரவு கிடைத்திருப்பதாகக் கருதும் கோட்டாபய, அந்த ஊக்கத்தில் ஏனைய தமிழ்ப் பிரதேசங்களுக்கும் அந்த அமைப்பு மூலமான தனது பிரசாரப் பணிகளைத் தீவிரப்படுத்தவும் திட்டமிடுகின்றார் எனத் தெரிகின்றது.

விரைவில் அடுத்த கூட்டத்தைத் திருகோணமலையில் தமிழர் மத்தியில் நடத்துவது அவரது உத்தேசம். அதைத் தொடர்ந்து அம்பாறை, மட்டக்களப்பு என்று கிழக்கில் காலை ஊன்றிக் கொண்டு பின்னர் வவுனியா, மன்னார் பக்கம் தலை வைக்கலாமா என்று யோசிக்கின்றார்.

பிறகென்ன? 'எலிய' அமைப்பை 'எளிய' (எளிமையான) அமைப்பாகக் காட்டிக் கொண்டு வடக்கிலும் தமிழர்கள் மத்தியில் ஊடுருவும் அவரது திட்டம் மெல்லக் கட்டவிழும் என்பது உறுதி.

'வெளிச்சம்' அமைப்புக்காக முந்திக்கொண்டு 'விளக்குப் பிடிக்கவும்' - இங்கு பல பிரகிருதிகள் ஏற்கனவே தயாராகக் காத்திருக்கின்றனர் என்றும் கேள்வி.

முள்ளிவாய்க்கால் வரை அரங்கேறிய பேரழிவுகளை மறந்து விட்டு, கோட்டாவுடன் சேர்ந்து நமது உள்ளூர்ப் பிரகிருதிகளும் இங்கு வெளிச்சம் பிடிப்பார்கள். அதற்காக விளக்குப் பிடிக்க இங்கு முண்டியடிப்பார்கள்.

கொழும்பில் இன்று மாலை தமிழ்ப் பத்திரிகைகளின் ஆசிரியர்கள், தமிழ் ஊடக முக்கியஸ்தர்களை கோட்டாபய சந்திக்கவிருக்கின்றார்.

வடக்கு, கிழக்கில் வெளிச்சத்துக்காக 'விளக்குப் பிடிக்கப் போகும்' பிரகிருதிகள் குறித்து யாரேனும் ஊடகவியலாளர்கள் கோட்டாபயவிடம் இன்று நேரடியாக கேட்டு விசாரிப்பார்களோ தெரியவில்லை.

விசாரித்தால் நல்லது. விசாரிப்பார்களா? கோட்டா தாம் அடையாளம் கண்டு வைத்திருக்கும் பிரகிருதிகளை அம்பலப் படுத்துவாரா? - இன்று மாலை தெரியவரும்.

- மின்னல் -

## விக்கியை...

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

கரிக வேலைகளை யாரும் செய்யக் கூடாது.

குறிப்பாக விக்கினேஸ்வரனை வீழ்த்தி அல்லது ஒதுக்கி விட்டு அடுத்த மாகாண சபைத் தேர்தலில் தமது கட்சி சார்பில் ஒருவரைக் கொண்டு வருவதற்காகவே இவ்வாறு தமிழரசுக் கட்சியினர் செயற்படுகின்றனர் என்பது அனைவருக்கும் தெரியும்.

ஆகவே இன்றைக்கு சுமந்திரன் போன்றவர்கள் கூறுவதை அவர்களுடைய கட்சியான தமிழரசுக் கட்சியினது அல்லது அவரது தனிப்பட்ட கருத்தாகவே பார்க்க வேண்டும். அது ஒட்டு மொத்த கூட்டமைப்பின் கருத்தல்ல.

ஏனெனில், முதல்வருக்கு எதிராக தமிழரசுக்கட்சி செயற்பட நாங்கள் முதல்வருக்கு ஆதரவாகவே செயற்படுகின்றோம்.

தமிழ் மக்கள் கொள்கையின் அடிப்படையில் ஒற்றுமையாக இருந்தார்கள். அந்த ஒற்றுமை இன்றைக்குச் சீர்குலைந்துள்ளது. ஆகவே கொள்கையின் அடிப்படையில் ஒற்றுமையாக மீண்டும்அனைவரும்இணைந்து செயற்பட வேண்டுமென்பதே எமது கட்சியின் நிலைப்பாடு ஆகும்.

அதற்கமைய அடுத்த மாகாண சபைத் தேர்தலிலும் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக விக்கினேஸ்வரன் நியமிக்கப்பட வேண்டுமென்பதே எங்களில் பலரது விருப்பம்.

அதற்கு மாறான நிலைமைகள் ஏற்படுகின்ற போது - அதிலும் முதலமைச்சர் தலைமையில் ஒரு கட்சி அல்லது புதிய கூட்டு உருவாகின்ற போது - தொடர்ந்தும் இந்தக் கூட்டில் இருப்பதா அல்லது புதிய கூட்டில் இணைவதா என்பது குறித்தும் அந்த நேரத்தில் முடிவெடுப்போம். ஏனெனில் தற்போதைய கூட்டில் அந்தளவிற்கு எமக்கு அதிருப்தி இருக்கின்றது. - என்றார் விந்தன்.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## புதிய மார்க்கம் தேடும் நிலைமை

**புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் குறித்துத் தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் சிலர் மீண்டும் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.**

*"சிறுபான்மையினரின் – குறிப்பாகத் தமிழர்களின் – உரிமைகள் அரசமைப்பின் ஊடாக உறுதிப்படுத்தப்பட வேண்டும், இல்லையேல் வடக்கில் ஏற்பட்டது போன்ற பிரச்சினைக்கு நாடு முகம் கொடுக்க நேரிடும்"* – என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா கூறியிருக்கின்றார்.

சரியோ, பிழையோ தன்னுடைய ஆட்சிக் காலத்தில் ஒரு காத்திரமான அரசமைப்பு நகல் ஒன்றை முன்வைத்தவர் சந்திரிகா. இதுவரை காலமும் பிரேரிக்கப்பட்ட அதிகாரப் பகிர்வுத் திட்டங்களில், அவரது காலத்தில், அவரது தலைமையில், முன்வைக்கப்பட்ட 2000 ஆம் ஆண்டின் அரசமைப்பு நகல் முன்மாதிரியானது. 'பிராந்தியங்களின் ஒன்றியம்' என்ற ஆட்சிமுறை அலகுகளின் கீழ் அதிக அதிகாரப் பரவலாக்கலுக்கு வழி செய்யும் விதத்தில் அந்த யோசனைத் திட்டம் பிரேரிக்கப்பட்டது.

அன்றைய அரசியல் நிலைமையும், தமிழரின் விடுதலைப் போராட்டத் தீவிரமும், செல்நெறியும் அந்தத் திட்டத்தை முன் நகர விடாமல் முறிவடையச் செய்துவிட்டன என்பது உண்மைதான். ஆனாலும் அது துரதிஷ்டவசமானது.

இதேசமயம், அமைச்சர் மனோ கணேசனும் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் குறித்து சில கருத்துக்களை முன்வைத்திருக்கின்றார்.

அரசியல் தீர்வை உள்ளடக்கிய புதிய அரசமைப்பு உருவாக்குதல் அத்தியாவசியமானது, தவிர்க்க முடியாதது என்பதை அவரும் வலியுறுத்துகின்றார். ஆனால், இன்றைய நிலையில் – இனிமேல் – அது சாத்தியமானதுதானா என்று யதார்த்தம் பற்றிய கேள்வி ஒன்றையும் அவர் எழுப்புகின்றார்.

*"அதிகாரப் பகிர்வு முறையினால் மட்டுமே தேசியப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். தேசியப் பிரச்சினையைத் அவ்வாறு தீர்ப்பதற்காகவே அதிகாரப் பகிர்வை உள்ளடக்கிய புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் எடுக்கப்பட்டன. கடந்த மூன்றரை வருடங்களில் இந்த அரசினால் அதனைச் செய்ய முடியாமல் போயிற்று. இந்த அரசின் எஞ்சியிருக்கும் ஒன்றரை வருட ஆட்சிக் காலத்தில் அதை செய்து முடிப்பது என்பது அசாத்தியமானதே."* – என்று உண்மையைப் போட்டு உடைத்திருக்கின்றார் மனோ கணேசன்.

இதேசமயம், இந்தப் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் குறித்து நல்லாட்சி அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஐ.தே.கவும் சில கருத்துக்களை முன்வைத்திருக்கின்றது.

*"புதிய அரசமைப்பைத் தயாரிப்புதற்கான பணிகளை நாம் கைவிடவில்லை. அதனை ஒரு வருடத்தில் முடித்து விட முடியாது. அதற்கு நீண்ட காலம் தேவைப்படும். அதன் ஒரு கட்டமாக சர்வஜன வாக்கெடுப்பும் நடத்த வேண்டியிருக்கும். ஆகவே, அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாகப் புதிய அரசமைப்புத் தயாரிப்பதற்கான முயற்சிகளை முன்னெடுப்போம்."* – என்று ஐ.தே.கட்சியின் சார்பில் அதன் தலைமையகமான ஸ்ரீகோத்தாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநட்டில் சுற்றாடல் பாதுகாப்பு பிரதி அசைச்சர் அஜீத் மன்னம்பெரும இவ்வாறு கூயிருக்கின்றார்.

அவர்கள் எல்லோருடைய கருத்துக்களையும் நோக்கும் போது, புதிய அரசமைப்பு 'வரும், ஆனால் வராது!' என்று தமிழ் சினிமாப் படத்தின் நகைச்சுவை வசனப் பாணியில்தான் விடயத்தை கவனத்தில் எடுக்கலாம் போலத் தோன்றுகின்றது.

புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும், அது கட்டாயமானது, தவிர்க்க முடியாதது என்பதை இந்த மூன்று தரப்பினருமே வலியுறுத்துகின்றனர். ஆனால் அது சாத்தியப்படப் போவதில்லை என்ற யதார்த்தப் புறச் சூழல் நிலைமையையும் அவர்கள் பிரதிபலிக்கத் தவறவில்லை என்றே கூறவேண்டும்.

இதுதான் நிலைமை என்றால், இனிமேல் தமிழர் தரப்பு யாது செய்யப் போகின்றது?

நீண்ட காலம் இலங்கைத் தீவில் புரையோடிப் போயிருக்கும் தேசிய இனப் பிரச்சினைக்கு அமைதி வழியில் – சமாதான முறையில் – நேர்மையான பாதையில் – தீர்வு ஒன்றைக் காண்பதற்கு, தற்போதைய நல்லாட்சி அரசுடன் இணைந்து சகல வழிகளிலும் விட்டுக் கொடுத்து, புரிந்துணர்வுடன் செயலாற்றி, தீவிர முயற்சியில் ஈடுபட்டு வந்துள்ளது தமிழ்த் தரப்பு. அதில் யாரும் சந்தேகமோ, தவறோ, குறையோ கூற முடியாது.

ஆனாலும், இந்த ஆட்சிப் பீடத்தினால் புதிய அரசமைப்பை உருவாக்கி, தேசிய இனப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வரும் தீர்வைத் தரலாம் என்ற நம்பிக்கை தளர்ந்து கொண்டே போகின்றது என்பதையே தற்போதைய களநிலைமை நமக்குக் காட்டி நிற்கின்றது. அதையே மேற்படி பிரமுகர்களின் அவதானிப்புகளும் கருத்து நிலைப்பாடுகளும் கூட பிரதிபலிக்கின்றன.

இந்த யதார்த்தப் புறச் சுழலில் தமிழர் தரப்பு இனி என்ன செய்வது? இதுதான் தமிழ் மக்களை இன்று உலுப்பும் கேள்வி.

தீர்வுக்காக புதிய பாதைகளை, மார்க்கங்களை நாம் நாட வேண்டியிருக்கும். புதிய கதவுகளை நாம் தட்ட வேண்டியிருக்கும். புதிய தரப்புகளோடு பேச வேண்டியிருக்கும். புதிய அணிகளோடு சேர்ந்தியங்க வேண்டிருக்கும். தேவைப்படின் புதிய தந்திரோபாயங்களையும் வகுக்க வேண்டியிருக்கும். தமிழ்த் தலைமை தனக்குள் புத்துணர்வும், புத்துயிர்ப்பும் ஊட்டி, அதற்குத் தயாராக வேண்டும். தயாராகுமா?

# மாணவரின் ஆதர்ச புருசர்களாக ஆசிரியர்களே திகழ வேண்டும்

## ஐங்கரநேசன் ஆதங்கம்




யாழ்ப்பாணம், ஜூலை 26

வடக்கில் நிகழுகின்ற குற்றச் செயல்களுக்குத் திரைப்படங்களே காரணம் என்று சட்டம், ஒழுங்குக்குப் பொறுப்பான மத்திய அமைச்சர் அண்மையில் யாழ்ப்பாணம் வந்த போது தெரிவித்திருக்கிறார். இதில் எந்த அளவுக்கு உண்மை இருக்கிறது என்று தொயவில்லை. ஆனால், எமது மாணவர்களில் பெரும்பாலானோர் தங்களது ஆதர்ச நாயகர்களாகத் திரைப்பட நடிகர்களை வரித்துக்கொண்டு அவர்களது நடை, உடை, பாவனையைப் பின்பற்றி வருகிறார்கள் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த நிலைமாறி மாணவர்களின் ஆதர்ச புருசர்களாக ஆசிரியர்களே திகழ வேண்டும். அந்த அளவுக்கு ஆசிரியர்கள் தங்களை ஆக்கிக் கொள்ள வேண்டும் என்று வட மாகாணசபை உறுப்பினரும் முன்னாள் விவசாய அமைச்சருமானபொ.ஐங்கரநேசன்ஆதங்கத்தோடு தொவித்துள்ளார்.

பொ.ஐங்கரநேசனுக்கு ஒதுக்கப்பட்ட பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியில் இருந்து கொக்குவில் சி.சி.த.க. பாடசாலைக்கு ஒளிப்படப்பிரதி இயந்திரம் ஒன்றைக் கையளிக்கும் வைபவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அந்தப் பாடசாலையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே பொ.ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும்போது -

பண்பாட்டுப் பிறழ்வான செயல்களில் ஆசிரியர்கள் ஈடுபட்டனர் என ஊடகங்களில் செய்திகள் வெளி வருகின்றமை அண்மைக்காலமாகத் தொடர் கதையாக உள்ளது. ஒரு சில ஆசிரியர்கள் விடுகின்ற தவறுகள் ஒட்டுமொத்த ஆசிரிய சமூகத்தையும் பாதிக்கின்றது. எல்லாப் பணிகளையும் விட ஆசிரியப் பணியே மகத்துவமானது. இந்த உன்னதமான சேவையின் புனிதம் காப்பாற்றுப் படுவதிலேயே எமது சமூகத்தின் எதிர்காலம் தங்கியுள்ளது.

ஆசிரியர்களின் கைகளில் ஒப்படைக்கப்படுகின்ற மாணவர்கள் பச்சைக்களிமண் போன்றவர்கள். இவர்கள் எந்த உருவத்தில் வனையப்படப் போகின்றார்கள் என்பது தங்களின் கைகளிலேயே தங்கியுள்ளது என்பதை ஆசிரியர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். வெறுமனே ஏட்டுக்கல்வியை போதிப்பவராக மாத்திரமல்லாமல் சகல விடயங்களிலும் மாணவர்கள் தங்களை பின்பற்றக் கூடிய முன்னுதாரணபுருசர்களாகவும்ஆசிரியர்கள் இருத்தல் வேண்டும்.

கற்பித்தலில் சிறந்த ஆசிரியர்களை, நல்ல நடிகர்கள் என்று சொல்லுவார்கள். இவர்கள் மாணவர்களின் மனஇறுக்கத்தைத் தளர்த்தி அவர்களை ஆர்வத்தோடு பாடங்களை உள்வாங்கச் செய்யும் விதத்தில் கற்பிக்கும்போது தேர்ந்த நடிகர்களாக ஆகிவிடுவார்கள். குரல் மொழியில் ஏற்ற, இறக்கங்களைக் காண்பித்தும், உடல் மொழியில் பாவனைகளைக் காண்பித்தும் மாணவர்களை உற்சாகமாகக் கற்கும் சூழலுக்கு தயார்செய்து போதிப்பதில்வெற்றி பெறுகிறார்கள்.

போரினால் பாதிக்கப்பட்ட எமது சமூகத்தில் ஆசிரியர்கள் வெறுமனே கற்பித்தலில் மாத்திரம் நின்றுவிடாது பெற்றோர்களாகஅவதாரம் எடுக்க வேண்டிய தேவையும் உள்ளது. பாடசாலைக்கு இன்றுவரும் மாணவர்களில் அநேகர் பெற்றோர்கள் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். கூலி வேலைக்குச் செல்லும் பெற்றோராலும் தங்களது பிள்ளைகளுடன் போதிய நேரத்தைச் செலவிட முடியாமல் உள்ளது. இந்நிலையில், மாணவர்கள் பெருமளவு நேரத்தைப் பாடசாலையிலேயே செலவிடுவதால் அவர்களை அன்பாக அரவணைத்து ஆற்றுப்படுத்துகின்ற இரண்டாவது பெற்றோர்களாகவும் எமது ஆசிரியர்கள் இயங்கவேண்டும்.

இன்றைய உலகமயமாக்கச் சூழலில் கட்டுப்பாடற்ற தகவல் தொழில்நுட்ப வசதிகளால் எமது மாணவர்கள் தமது வயதுக்கு மீறிய உலகத்துக்குள் வாழ்வதற்கு நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இதன் சரி, பிழைகளைத் தீர்மானிக்கமுடியாத நிலையில் மாணவர்கள் தவறான வழித்தடத்தில் பயணிக்க நேரிடுகிறது. இந்நிலையில்இ மாணவர்களுடன் மனம்விட்டுப்பேசி அவர்களுக்கு நன்மை,தீமைகளை எடுத் துச்சொல்லும் நண்பர்களாகவும் ஆசிரியர்கள் இருத்தல் வேண்டும்.

எமது ஆசிரியர்களும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகத்தின் பிரதிநிதிகள் என்ற வகையில் ஏராளமான பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்தவாறே பாடசாலைக்கு வருகிறார்கள். ஆசிரியர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதில் அரசாங்கம் முன்னுரிமை கொடுத்துச்செயற்பட வேண்டும். அப்போதுதான் எமது ஆசிரியர்களால் முழுமனதோடு ஆசிரியப்பணியை முன்னெடுக்கவும் முடியும். - என்றும் தெரிவித்துள்ளார்.

(இ)

# 12 ஆயிரம் முன்னாள் போராளிகளுக்கு கடந்த 10 ஆண்டுகளில் புனர்வாழ்வு

2008ஆம் ஆண்டுக்கும், 2018ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில், 12 ஆயிரத்து 186 விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கே, இதுபற்றிய தரவுகள் வழங்கப்பட்டுள்ளன.

புனர்வாழ்வு ஆணையாளர் நாயகத்திடம், ஊடகவியலாளர் தரிந்து ஜெயவர்த்தன, புனர்வாழ்வு அளிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் தொடர்பாக, தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் கேள்வி எழுப்பியிருந்தார். எனினும், இந்த விண்ணப்பம் முதலில் நிராகரிக்கப்பட்டது.

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் தனியுரிமை மற்றும் தேசிய பாதுகாப்பு ஆகிய காரணங்களைக் காட்டியே இந்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

எனினும், இந்த தரவுகளால் தேசிய பாதுகாப்புக்கோ, தனியுரிமைக்கோ ஆபத்துஏற்படாதுஎன்று முன்வைக்கப்பட்ட வாதத்தை அடுத்து, புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் சில தகவல்களை வழங்கியுள்ளார்.

இதற்கமைய, 2008ஆம் ஆண்டுக்கும் 2018ஆம் ஆண்டுக்கும் இடையில், 12,186 விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களில், 4,156 பேர், 20 வயதுக்கும்29வயதுக்கும்இடைப்பட்டவர்களாவர். இவர்களில் 1,084 பேர் பெண் போராளிகள்.

2010ஆம் ஆண்டிலேயே அதிக பட்சமாக, 5,586 போராளிகளுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டது.

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளில், 594 பேர் சிறுவர்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

# உரும்பிராயில் குருபூர்ணிமா

உரும்பிராய், ஜூலை 26

யாழ்ப்பாணம் மருதனார் மடம் உரும்பிராய் சந்தி இராம கிருஷ்ண மிஷன் நலன்புரி நிலைய பிரார்த்தனை மண்டபத்தில்நாளைவெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணி முதல் 6 மணி வரை குருபூர்ணிமா நிகழ்வுகள் இடம்பெறும்.

பஜனையைத் தொடர்ந்து குருவின் மகிமை என்ற தலைப்பில் பிரம்மஸ்ரீ சிவானந்த சர்மா (கோப்பாய் சிவம்) சிறப்பு ஆன்மிக சொற்பொழிவு ஆற்றுவார்.

(இ)

## நாளை

**27.07.2018**
**வெள்ளிக்கிழமை**

நட்சத்திரம் : உத்தராடம் பி.இ 1.30 வரை
திதி : பூரணை பி.இ 2.07 வரை
சுபநேரம் : 6.02 – 7.32 வரை
இராகுகாலம் : 10.32 – 12.02 வரை

# புத்தளம் நீர் சுத்திகரிப்பு தொகுதிகள் தொலைதூர தொழில்நுட்ப முறையில் ஜனாதிபதியால் திறப்பு

கொழும்பு, ஜூலை 26

விரிவான மக்கள் இயக்கமான கிராமசக்திமக்கள் இயக்கத்துடன் இணைந்ததாக நடைமுறைப்படுத்தப்படும் 'கிராமத்தை கட்டியெழுப்பும் பயணம்' செயற்திட்டத்தின் முதலாவது நிகழ்வு அண்மையில் புத்தளம் மாவட்டத்தில் இடம்பெற்றது.

வறுமையை இல்லாதொழிப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் எண்ணக்கருவிற்கமைய செயற்படுத்தப்படும் 'கிராமத்தைக் கட்டியெழுப்பும்பயணம்'செயற்திட்டத்தினூடாககிராமிய மக்களின் அபிவிருத்தி பிரச்சினைகளுக்கு துரித தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதுடன், மாவட்டத்தின் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளும் உள்ளடக்கப்படும் வகையில் மக்கள் பிரதிநிதிகள் ஓர் இடத்திற்கு அழைக்கப்பட்டு அவர்களது அபிவிருத்தி தொடர்பான பிரச்சினைகளை ஜனாதிபதியிடம் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



அதற்கமைய, புத்தளம் மாவட்டத்தை மையப்படுத்தி இடம்பெற்ற நிகழ்வின் போது முன்வைக்கப்பட்ட குடிதண்ணீர் பிரச்சினைக்கு துரித தீர்வை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் சிறுநீரக நோய் நிவாரண தேசிய செயற்திட்டத்தின் நெறிப்படுத்தலில் புத்தளம் நவகத்தேகம, ஆனமடுவ மற்றும் தங்கொட்டுவ பிரதேச செயலாளர் பிரிவுகளில் நீர் சுத்திகரிப்பு தொகுதிகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

இந்த நீர் சுத்திகரிப்பு தொகுதிகளை ஜனாதிபதி தொலைதூர தொழிநுட்ப முறையால் ஜனாதிபதி செயலகத்திலிருந்து நேற்றுமுன்தினம் பிற்பகல் திறந்து வைத்தார்.

அதனை நிகழ்வு நடந்த தளத்திலிருக்கும் மக்கள் நேரடியாக பார்வையிடுவதற்கும் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்ததுடன், அங்கு பல அரசியல் பிரதிநிதிகளும் அரச அதிகாரிகளும் கூடியிருந்து தமது பங்களிப்பை வழங்கினர்.

நவகத்தேகம ஆரம்ப பாடசாலை, ஆனமடுவ மத்திய மகா வித்தியாலயம் மற்றும் தங்கொட்டுவ, மெடிகொடுவ, நெலும் உயன பிரதேச சபைக்குரிய பூங்காக்களில் இந்த நீர் சுத்திகரிப்பு தொகுதிகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

இந்த பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 3,000 பயனாளிகள் தினமும் 10,000 லீற்றர் வீதம் இதனூடாக சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்ள முடியும்.

சிறுநீரக நோயை நாட்டிலிருந்து இல்லாதொழிப்பதற்காக கிராமங்களுக்கு சுத்தமான குடிதண்ணீர் வசதிகளை வழங்கும் நோக்கில் நாடு முழுவதும் உள்ள 1,092,500 பயனாளிகளுக்காக 67 கோடியே 50 லட்சம் ரூபா செலவில் 450 நீர் சுத்திகரிப்பு தொகுதிகள் இதுவரை நாட்டில் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் சிறுநீரக நோய் நிவாரண ஜனாதிபதி செயலணியின் செயற்திட்ட பணிப்பாளர் அசேல இத்தவெலவும் கலந்துகொண்டார்.

## யாழ் போதனா வைத்தியசாலையில் புதிய அவசர சிகிச்சை பிரிவு

யாழ். போதனா வைத்தியசாலையில் புதிய அவசர சிகிச்சைப் பிரிவொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவு அடுத்த மாதம் 17 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

அதற்கு மேலாக புதிதாக அமைக்கப்பட்டு வருகின்ற கட்டடத்துடன் அதனை நான்கு மாடியாக அமைப்பதற்குரிய நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதற்காக 20 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், அரியாலைப் பகுதியில் தனியார் ஒருவர் வைத்தியசாலைக்காக இரண்டு ஏக்கர் காணியை அன்பளிப்புச் செய்துள்ளார்.

அக்காணியில் கண் வைத்தியசாலையை அமைப்பதற்குரிய நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

## வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்ச் செய்கைக்கு பெற்றுக் கொண்ட கடனை நீக்க அரசு தீர்மானம்

நுண்நிதி நிறுவனங்கள் மூலம் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஒரு லட்சம் ரூபா வரையான கடனை நீக்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

அமைச்சர் மங்கள சமரவீர இது தொடர்பில் முன்வைத்த பிரேரணைக்கு நேற்றுமுன்தினம் அமைச்சரவை அனுமதியளித்தது.

இதன்படி, அண்மைக் காலத்தில் வறட்சி காரணமாக தொடர்ந்தும் 5 தடவைகள் பயிர் சேதங்களை எதிர்கொண்ட 12 மாவட்டங்களைச் சேர்ந்த பெண்கள் குறிப்பிட்ட நிதி நிறுவனங்களிடம் இருந்து பெற்றுக்கொண்ட கடன் நீக்கப்படும்.

திருகோணமலை, அம்பாறை,மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், குருநாகல், புத்தளம், அனுராதபுரம், பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் கடனைப் பெற்றுக் கொண்ட பெண்களுக்கு இந்தச் சலுகை வழங்கப்படும்.

நிதி நிறுவனங்களினால் எதிர்காலத்தில் வழங்கப்படும் அனைத்துக் கடன்களுக்குமான வட்டி 30 சதவீதத்தை தாண்டக்கூடாது என அரசு தீர்மானித்துள்ளது என இராஜாங்க அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

## யாழ். பல்கலைக்கழகத்தில் இருநாள் ஆய்வரங்கு

### நாளையும் நாளைமறுதினமும்

யாழ்ப்பாணம், ஜூலை 26

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சுவாமி முருகேசன் அறக் கட்டளையுடன் இணைந்து நடத்தும் ஆய்வரங்கு - 2018 நாளை வெள்ளிக்கிழமையும் நாளை மறுதினம் சனிக்கிழமையும் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெறும்.

ஆரம்ப நாளான நாளை காலை 8.30 மணியளவில் சுவாமி முருகேசரின் "சைவ சித்தாந்த சிந்தனைகளும் மேரு புத்திரியின் நூல்களும்" எனும் கருப்பொருளில்யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைப் பேராசிரியர் மா.வேதநாதன் தலைமையில் ஆய்வரங்கு இடம்பெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். இந்தியத் துணைத் தூதரக உதவித் தூதுவர் எஸ்.பாலச்சந்திரன், யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி கலாநிதி க.சுதாகர், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

இரண்டாம் நாள் நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக மேனாள் கலைப் பீடாதிபதி தகைசார் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக தஞ்சாவூர் பல்கலைக்கழக துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் க.பாஸ்கரனும் சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு முனைவர் அருட்திரு ஊரன் அடிகளாரும் கௌரவ விருந்தினர்களாக தஞ்சாவூர் ஆலய வழிபடுநர் சங்கத் தலைவர் ரி.ஆர்.ரமேஸும், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் மூத்த துணைப் பதிவாளர் ஆர். சுப்புராயலுவும் கலந்து கொள்வர். (இ

## மின்தடை

யாழ்ப்பாணம், ஜூலை 26

உயர்அழுத்ததாழ்அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 6 மணி வரை-

**யாழ் பிரதேசத்தில் -**

கைதடி கிழக்கு, நவபுரம், கள்ளிநகர், கைதடி வடக்கு ஆகிய பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## அளுத்கம தர்காநகர் மோதல் சம்பவம்; பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்று இழப்பீடு



கொழும்பு, ஜூலை 26

2014 ஆம் ஆண்டு அளுத்கம தர்கா நகரில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட வர்த்தக நிலையங்கள் மற்றும் வீடுகளுக்கான இழப்பீடுகள் வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வு இன்று பிற்பகல் 3.00 மணிக்கு அளுத்கம தர்கா நகரிலுள்ள ஸாஹிரா கல்லூரியில் சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் டொக்டர் ராஜித சேனாரத்ன தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன்போது 122 வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு 18 கோடியே 80 லட்சம் ரூபா இழப்பீடு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று அமைச்சரும் அமைச்சரவை துணைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன நேற்று தெரிவித்தார்.

சமகால நல்லாட்சி அரசின் மற்றுமொரு உறுதிமொழி யின் அடிப்படையில் இந்த இழப்பீடு வழங்கப்படுகிறது என அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

(க)

## பொன்னர் அஞ்சலி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின்புகழ்பூத்த முன்னாள் அதிபர்களுள் ஒருவரான அமரர் எஸ்.பொன்னம்பலத்தின் அஞ்சலி நிகழ்வு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு கல்லூரியில் நடைபெறவிருக்கின்றது.

இந்த நிகழ்வில் பங்குபற்றுமாறு பழைய மாணவர், ஆசிரியர்கள், கல்லூரி அபிமானிகள் அனைவருக்கும் கல்லூரி பழைய மாணவர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

பொன்னம்பலம் கடந்த 23 ஆம் திகதி திங்கட்கிழமை சிட்னியில் காலமானார். அவரின் இறுதிக் கிரியைகள் இன்று மாலை சிட்னியில் நடைபெறும் போது இங்கு கல்லூரியில் இந்த நினைவஞ்சலி நிகழ்வும் இடம் பெறும்.

# சாயி நிலையத்தில் குருபூர்ணிமா தினம்



யாழ்ப்பாணம், ஜூலை 26

யாழ்ப்பாணம் சத்திய சாயி சேவா நிலையத்தின் 51 ஆவது ஆண்டுநிறைவுதின குருபூர்ணிமா நிகழ்வுகள், நாளை வெள்ளிக்கிழமை, யாழ். இராமநாதன் வீதி சாயி நிலையத்தில் இடம்பெறும்.

வழமையான நிகழ்வுகளுடன் காலை 8.45 மணிக்கு பிரசாந்தி கொடியேற்றத்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். பகல் 12.30 மணிக்கு மகா மங்களாரத்தி இடம் பெறும். தொடர்ந்து நாராயண சேவை நடைபெறும்.

மாலை நிகழ்வுகள் பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகி 5 மணிக்கு நிறைவு பெறும். (இ)

# தினசரி ராசி பலன் (26.07.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் ஆடித்திங்கள் 10ஆம் நாள் வியாழக்கிழமை சதுர்த்தித்திதி இரவு 11.16 மணி வரை பின்னர் பூரணை. நட்சத்திரம்: பூராடம் இரவு 9.25 வரை பின்னர் உத்தராடம். சித்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - பகல் 1.51 மணி முதல் 3.25 மணி வரை.

**சுபநேரம்** - காலை 7.34 மணி முதல் 9.04 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - ஆடி மாத வளர்பிறை சதுர்த்தசி.

இன்று பிரதோஷ விரதம்.

**பிறந்த நட்சத்திர வழிபாடு**- பூராடம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** ஆக்கபூர்வமான நாள். பொருளாதாரம் மேம்படும். ஆரோக்கியம் சிறப்படையும். வியாபாரிகளுக்கு அழகு சாதனப் பொருள்கள் விற்பனை லாபத்தைத் தரும். உத்தியோகத்தர்களுக்கு உயர்வுகள் கிடைக்கும்.

**ரிஷபம்** அலைச்சல் மிகுந்த நாள். தொழில் ரீதியான அலைச்சல்கள் அதிகரிக்கும். படித்து முடித்த சிலர் வேலை தேடித் திரிவார்கள். சிலர் வெளிநாடு செல்ல விரும்பி அதற்குரிய ஆவணங்களைத் தேடி அலைவார்கள்.

**மிதுனம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். எதிர்பாராத பணச் செலவுகள் உண்டாகும். வியாபார வளர்ச்சி குன்றும். தொழிலாளர்களுக்கு தொழில் விருத்தி குன்றும்.

**கடகம்** இன்பமான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். வெளிநாட்டுத் தொடர்புகளால் மனத் திருப்தி உண்டாகும். புதிய வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும்.

**சிம்மம்** நன்மையான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். சமூக அந்தஸ்து, தொழில் வளர்ச்சி ஏற்படும். வியாபார நடவடிக்கைகள் சிறப்பாக நடக்கும். சகோதர உறவு வலுவடையும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**கன்னி** யோசனையான நாள். வருமானம் குறையும். தேகாரோக்கியம் சீரற்றுக் காணப்படும். உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம், போதிய வருமானம் இன்மையால் மனம் வேதனைப்படும்.

**துலாம்** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். வீண் அலைச்சலால் ஆரோக்கியம் குறைவடையும். வியாபாரிகளுக்கு சம லாபம் கிடைக்கும். தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு குறையும்.

**விருச்சிகம்** இனிமையான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். எண்ணிய கருமங்கள் நிறைவேறும். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் சீராக அமையும்.

**தனுசு** ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். வியாபாரத்தில் அமோக லாபம் கிடைக்கும். உத்தியோகத்தர்கள் பல நன்மைகளைப் பெறுவார்கள். மாணவர்கள் அரச உதவியுடன் கல்வியில் முன்னேறுவார்கள்.

**மகரம்** கவலையான நாள். வருமானம் நலிவடையும். குடும்ப அமைதி குன்றும். வியாபாரிகளுக்கு அயல் கடைக்காரர்களுடன் பிரச்சினை தோன்றும். முதலாளியின் தயவை நம்பிய தொழிலாளர்கள் ஏமாற்றம் அடைவார்கள்.

**கும்பம்** யோகமான நாள். தனலாபம் பெருகும். நினைத்த காரிய வெற்றியும், மனத் திருப்தியும் உண்டாகும். புத்திர முன்னேற்றங்களும், உதவிகளும் குறைவின்றி அமையும். வீடு, வாகன யோகம் உண்டாகும்.

**மீனம்** விருத்தியான நாள். பொருளாதாரம் வளர்ச்சி அடையும். பிரிந்த குடும்பங்கள் ஒன்று சேரும். இதுவரை வாட்டி வதைத்த நோய்கள் நீங்கும். சிலர் சொந்தத் தொழில் தொடங்குவார்கள்.

சந்திராஷ்டம நாள்; **கார்த்திகை 2ஆம், 3ஆம் 4ஆம் பாதங்கள் ரோகினி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# யாழ். தெல்லிப்பழையில் நவீன விவசாய உபகரண கண்காட்சி



யாழ்ப்பாணம், ஜூலை 26

தெல்லிப்பழையில் நவீன விவசாய உபகரணங்கள் குறித்த கண்காட்சி விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் ஆரம்பமானது.

தெல்லிப்பழை கமநல சேவை நிலையத்தில் நேற்றுக் காலை ஆரம்பமான இந்த கண்காட்சியில் விவசாய தெளிகருவி, நவீன விவசாய கருவிகளைக் கையாளும் இலவச சேவை முகாம் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நவீன உபகரணங்கள் குறித்த அறிமுகம் தொடர்பில் அதிகாரிகளினால் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு பாவனை முறைகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தெல்லிப்பழை பிரதேச செயலாளர், கமநல ஆணையாளர், கமநலசேவை உத்தியோகத்தர்கள், விவசாய சம்மேளன உறுப்பினர்கள் ,விவசாயிகள் கலந்துகொண்டனர்.

மேலும் , உருத்திரபுரம் கமநல சேவை நிலையத்திற்கு விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் விஜயம் ஒன்றை மேற்கொண்டு விவசாய சம்மேளன பிரதிநிதிகளை சந்தித்து நிலவும் வறட்சி தொடர்பாகவும் . விவசாய செய்கையில் எதிர்நோக்கும் எதிர்வினைகள் குறித்தும் கேட்டறிந்தார் .

அத்துடன் மக்களது குடிதண்ணீர் மற்றும் விவசாயத்திற்கு தேவையான நீரை பெற்றுக்கொள்ள இரணைமடுக்குள புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் உமையாள்புரம் போன்ற கிராமங்களுக்கு இரணைமடு குள நீர் வழங்கப்படுவதில்லை எனவும் மேலும் பல விவசாய செய்கை மேற்கொள்ளும் இடங்களுக்கு வாய்க்கால் வசதி இன்மையால் நீரை பெற்றுக்கொள்ள முடியாமல் இருப்பதாகவும் விவசாயிகள் இதன்போது சுட்டிக்காட்டினர்.

விவசாயத்துடன் ஒன்றிணைந்ததாக நீர் வழங்கல் காணப்பட்டாலும் அதற்கான மத்திய மற்றும் மாகாண அமைச்சும் தொடர்புபடுவதனால் நீர்விநியோகம் தொடர்பாக உரிய அமைச்சுடன் அதற்கான வழிமுறைகள் குறித்து உடனடியாக பரிசீலனை செய்வதற்காக மாவட்ட ரீதியில் விவசாய ஆணையாளர், விவசாய அதிகாரிகள் நீர் வழங்கல் தொடர்பாக மாகாண அமைச்சின் அதிகாரிகளையும் ஒன்றிணைத்து உரிய தீர்வுகள் பெற்றுத்தரப்படுமென உறுதியளித்திருந்தார்.

உருத்திரபுரம் கமநல சேவைபிரிவுக்குட்பட்ட விவசாயிகளும்குரங்கின்தொல்லை காணப்படுவதாகவும் முன்பு வழங்கப்பட்டிருந்த சுடு கலன் மீண்டும் பெற்றுத்தரப் பட வேண்டுமென வலியுறுத்தியிருந்தனர்.

# விபுலானந்த நுண்கலை கல்லூரியின் வசதிகளை விரிவுபடுத்த நடவடிக்கை



கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு உட்பட்ட சுவாமி விபுலானந்த நுண்கலை கல்வி நிறுவனத்தின் வசதிகளை விரிவுபடுத்துவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாக சுகாதார போக்கு மற்றும் சுதேச வைத்திய துறை அமைச்சரும் அமைச்சரவை துணைபேச்சாளருமான ராஜித சேனாரத்ன இது தொடர்பாக தெரிவிக்கையில் –

இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட சுவாமி விபுலானந்த நுண்கலை கல்வி நிறுவனம் இசை மற்றும் நடனம் ஆகிய கற்கை நெறிகளுக்கு மேலதிகமாக நடிப்புக் கலை மற்றும் சிற்பக் கலை முதலான கற்கை நெறிகளைத் தொடரக்கூடிய வகையில் இதன் கல்வி நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனால் இந்த நிறுவனம் கொண்டுள்ள வசதிகள் தற்போதைய கற்கை நெறிகளுக்கு போதுமானதல்ல.

இதனால் , பொருத்தமான வகையில் வசதிகளை மேம்படுத்துவதற்கான தேவையும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதற்கமைவாக சுவாமி விபுலானந்தநுண்கலைகல்வி நிறுவனத்தை - நவீனமயப்படுத்துவதற்கும் காணொலி பதிவுகளை மேற்கொள்வதற்கும் தொகுப்புக்கான வசதிகளைக் கொண்டதான கட்டட தொகுதி ஒன்றை நிர்மாணிப்பதற்கும் அதற்கு தேவையான ஏனைய வசதிகளை பெற்றுக் கொடுத்து அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான திட்டம் இந்திய அரசின் நிதி உதவியாக கிடைக்கும் 275மில்லியன் ரூபா மற்றும் அரசாங்கத்தின் 60.7 மில்லியன் ரூபாவை கொண்ட மொத்த முதலீட்டின் கீழ் நடைமுறைபடுத்துவதற்காக உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ சமர்ப்பித்த ஆவணத்திற்கு அமைச்சரை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றும் அவர் கூறினார்.

# கிளிநொச்சி, இரத்தினபுரி நீதிமன்றங்களுக்கு புதிதாக கட்டடத் தொகுதிகள் அமைக்க அங்கீகாரம்!

இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி நீதிமன்றங்களுக்குபுதிதாக கட்டடத் தொகுதிகள் அமைக்கப்படவுள்ளன.

இரத்தினபுரி மாவட்டத்தில் நீதிமன்ற நடவடிக்கைகளில் நிலவும் இட நெருக்கடியால் அங்கு தற்பொழுது உள்ள கட்டடத்திலான சேவை தன்மை மற்றும் மண்சரிவு அனர்த்தத்தின் காரணமாக இரத்தினபுரி நீதிமன்ற கட்டட தொகுதியின் நிர்மாண பணிகளை துரிதமாக மேற்கொள்வதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதே போன்று கிளிநொச்சி நீதிமன்ற கட்டட தொகுதியையும் போதுமான அடிப்படை வசதிகளுடன் விரிவுபடுத்த வேண்டும் என்பது அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதற்கமைவாக இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி நீதிமன்ற கட்டட தொகுதிகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தை பொறியியலாளர் பணிகள் தொடர்பான மத்திய ஆலோசனை பிரிவிற்கு வழங்குவதற்காக நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துக்கோரள சமர்ப்பித்த ஆவணத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று சுகாதார போக்கு மற்றும் சுதேச வைத்தியத் துறை அமைச்சரும் அமைச்சரவை துணை பேச்சாளருமான டொக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

# வடக்கில் சீனா வீடு கட்டுவதை இந்தியா விரும்பவில்லை: ராஜித



கொழும்பு, ஜுலை 26

வடக்கில் சீனா வீடுகளை அமைப்பதற்கு இந்தியா விரும்பவில்லை என அமைச்சரவைப் இணைப்பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில் –

இலங்கைக்கான 50 ஆயிரம் இந்திய வீட்டு திட்டத்தில் பெறும்தொகையான வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. 22 லட்சம் ரூபா செலவிலேயே இந்தியா வீடொன்றைக் கட்டுகின்றது. ஆனால் சீனா 13 லட்சம் ரூபா செலவில் வடக்கில் வீடுகளை அமைக்க முன்வந்துள்ளது. எனவே தான் அமைச்சர் சுவாமிநாதன் சீன வீட்டு திட்டம் குறித்து கவனம் செலுத்தினார்.

ஆனால், இங்கு இருப்பது இராஜதந்திர பிரச்சினையாகும். எனவே பிரதமர் இந்த விடயத்தை இரு தரப்புடனும் பேசி இணக்கப்பாட்டிற்கு கொண்டுவர உள்ளார் என்றும் அவர் கூறியுள்ளார்.

# மர்மமான முறையில் உயிரிழந்த பிரபல நடிகர்: காரணம் வெளியானது

கொழும்பு, ஜுலை 26

இலங்கையின் பிரபல நடிகர் ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்தமை சிங்கள திரையுலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்தநிலையில் மரணத்திற்கு, அவர் பயன்படுத்திய மாத்திரை காரணமாக இருக்கலாம் என வைத்தியர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

பிரபல சிங்கள நடிகரான 37 வயதான இந்திக்க கினிகே கடந்த திங்கட்கிழமை உயிரிழந்தார்.

இந்திக்க ஏற்கனவே இந்த மாத்திரையை பயன்படுத்தி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என தெரியவந்துள்ளது.

இந்தநிலையில் மீண்டும் அதனை பயன்படுத்தியமையால், இந்திக்க கினிகே தனது வீட்டில் உயிரிழந்திருந்தார்.



மூடப்பட்டிருந்த மகனின் அறை கதவை உடைத்து பார்க்கும் போது மகன் மயக்கமடைந்த நிலையில் காணப்பட்டார் என இந்திக்கவின் தந்தை பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இந்திக்க கினிகேவின் இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டு மதுபான போத்தல்களுடன் இந்திய பிரஜை கைது!

வெளிநாட்டு மதுபான போத்தல்களை சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கடத்த முயற்சித்த இந்திய பிரஜையொருவர் நேற்றுமுன்தினம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் விமான நிலைய பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்த சம்பவத்தில் 27 வயதுடைய இந்திய பிரஜையொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் சட்டவிரோதமான முறையில் அனுமதி பத்திரம் பெற்றுக்கொள்ளாமல் வெளிநாட்டு மதுபான போத்தல்களை இலங்கைக்குள் கடத்த முயற்சித்துள்ளார்.

இவர் நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் இவ்வாறு ஒரு லீற்றர் கொண்ட 12 வெளிநாட்டு மதுபான போத்தல்கள்களுடன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தநிலையில் இவ்வாறு கைதுசெய்யப்பட்ட குறித்த நபரை நேற்றுக் காலை நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய வேளையில் நீதிவான் அவரை 12 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து விடுவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை விமான நிலைய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சபாநாயகர் தலைமையில் எகிப்துக்கு 12 பேர் குழு



கொழும்பு, ஜுலை 26

சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில், 12 பேரடங்கிய தூதுக்குழுவொன்று எகிப்துக்கு பயணமாகியுள்ளது.

எகிப்து நாடாமன்றத்தின் சபாநாயகர் விடுத்திருந்த விசேடமான அழைப்பை ஏற்றே அக்குழுவினர், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தினூடாக நேற்று புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

இரு நாடுகளுக்கும் இடையிலான நாடாளுமன்ற தொடர்புகளை வலுப்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு மட்டங்களில், அக்குழுவினர் பேச்சுகளில் ஈடுபடுவரென தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தூதுக்குழுவில், அமைச்சர்களான கயந்த கருணாதிலக்க, ஜே.சி. அலவத்துவல, இராஜாங்க அமைச்சர்களானரஞ்சித்அலுவிஹார, ஏ.எச்.எம். பௌசி, பிரதியமைச்சர் எட்வட் குணசேகர, நாடாளுமன்ற உறுப்பினர்களான மஹிந்த யாப்பா அபேவர்தன, அனுர சிட்னி ஜயரத்ன, எம்.ஐ.எம். மன்சூர், ஹெக்டர்ஹப்புஹாமி, அ.அரவிந்தகுமார் மற்றும் நாடாளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகம் நீல் இத்தவல ஆகியோர் அடங்குகின்றனர்.

# ஹெரோயினுடன் யுவதி கைது!

கொழும்பு, ஜுலை 26

பொரளை சரணபால ஹிமி மாவத்தையில் நேற்றுமுன்தினம் ஹெரோயின் போதைப் பொருளுடன் யுவதி ஒருவர் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சரணபால ஹிமி மாவத்தை பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போது மேற்படி யுவதி 11 கிராம் 60 மில்லி கிராம் நிறையுடைய ஹெரோயின் பக்கெட்டுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட யுவதி நேற்று மேலதிக விசாரணைகளுக்கு பொரளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். பொரளை பொலி ஸார் நேற்று மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொண்டிருந்தனர்.

# வீதியில் விடப்பட்ட பிறந்து சில நாள்களேயான சிசு

தம்புள்ளை, ஜுலை 26

தம்புள்ளை - பொஹொரன்வெவ, பிரதான வீதியில் பிறந்து ஒரு சில நாள்களேயான பெண் சிசு ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இந்த வீதியில் பயணித்த வாகன சாரதியினால் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமைய நேற்றுக் காலை பெண் சிசு மீட்கப்பட்டு தம்புள்ளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளது.

சிகிச்சையின் பின்னர் குழந்தை நலமாக இருக்கிறது என தம்புள்ளை வைத்தியசாலை வட்டாரங்கள் உறுதிபடுத்தியுள்ளன.

மேலும் இந்த குழந்தை பெற்றோரால் கைவிடப்பட்டதா? அல்லது பெற்றோரிடமிருந்து யாராவது கடத்தி வந்து வீதியில் விட்டுச் சென்றுள்ளனரா? என்ற கோணத்தில் பொலிஸார் தங்களது விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# கிழக்கு மாகாண ஆளுநரும் பிராந்திய கடற்படை தளபதியும் சந்திப்பு





கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகமவிற்கும் இலங்கை கடற்படையின் கிழக்கு மாகாண கடற்படை கட்டளைத்தளபதி ரியர் அட்மிரல் எஸ்.ஏ.வீரசிங்ஹவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் மாலை கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

இதன்போது, கிழக்கு மாகாண கடற்படை தளபதியாக பதவியேற்றதையடுத்து முதல் முறையாக ஆளுநரைச் சந்தித்த தளபதி ஆளுநருக்கு ஞாபக சின்னமொன்றையும் வழங்கினார்.

இந்த கலந்துரையாடலின் போது கிழக்கு மாகாண பிரதம செயலாளர் டி.எம்.எஸ்.அபே குணவர்தனவும் கலந்து கொண்டிருந்தார்.

# ஹெரோயினுடன் ஆறு பேர் கைது!



பதுளை, ஜுலை 26

பதுளை அப்புத்தளைப்பகுதியில் லொறியொன்றிலிருந்து ஹெரோயின் பக்கற்றுக்களை பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர்.

323 ஹெரோயின் பக்கற்றுக்களை மீட்டுள்ள பொலிஸார், சந்தேகத்தின் பேரில் ஆறு பேரை கைது செய்துள்ளனர்.

மேலும் கைது செய்யப்பட்டவர்களிட மிருந்து போதை பொருள்கள் விற்பனை செய்ய பயன்படுத்திய சிம் அட்டைகள், கையடக்கத் தொலைபேசிகள், வங்கிக் கணக்கு பற்று சீட்டுகள் பலவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இவர்கள் ஆறு பேரும் பண்டாரவளை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டபோது , அவர்களை அடுத்த மாதம் மூன்றாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# தங்கம் கடத்திய இருவர் கைது

கொழும்பபு, ஜுலை 26

சட்டவிரோதமான முறையில் தங்கம் கடத்திய இருவரை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

கற்பிட்டி கிம்புல்பொக்க கடற்பரப்பில் வைத்து இந்த இருவரும் 5.7 கிலோ கிராம் தங்கத்துடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட தங்கத்தின் பெறுமதி 2கோடி ரூபா என கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர்கள் பயணித்த படகையும் கைப்பற்றியுள்ள கடற்படையினர் இவர்கள் இருவரிடமும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும் தமிழ்நாடு கடைய நல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.ஏ.முகம்மது அபூபக்கர் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவைச் சந்தித்து கலந்துரையாடினார். அவ்வேளை வட மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், எதிர்க் கட்சித் தலைவர் எஸ்.தவராசா, அஸ்மின் அய்யூப் மற்றும் தமிழ், முஸ்லிம் சமூக பிரதி நிதிகளும் கலந்து கொண்டனர். (இ-19)







யாழ். மன்ப உல் உலூம் முன்பள்ளி மாணவர்களின் சந்தை விற்பனை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது... (இ-19)

**படங்கள் - எம்.எல்.லாபிர்**

இலங்கை விஜயத்தை மேற்கொண்டுள்ள தமிழ் நாடு, கடைய நல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.முஹம்மது அபூபக்கர் குழுவினர் யாழ். இந்திய துணை தூதுவர் ச.பாலச்சந்திரனை தூதரகத்தில் சந்தித்து இரு நாட்டு உறவுகள் பற்றியும், இலக்கியம் சம்பந்தமாகவும் உரையாடிய வேளையில்... (இ-19)

**படங்கள்.எம்.எல்.லாபிர்**







# சக்தி பீடங்களில் காலத்தால் முந்தியது மண்டைதீவு முத்துமாரி தேவஸ்தானம்

## இன்று அன்னைக்கு தேர்த் திருவிழா

மண்டைதீவு கிழக்கில் முதலாம் வட்டாரத்தில் வயல் கரையும் தோட்ட நிலங்களும் ஒருங்கே அமையப் பெற்ற வேப்பந்திடல் எனப்படும் மணல் திடலில் அமைந்து அருளாட்சி புரியும் முத்தமாரி அம்பாள் ஆலயம் நீண்ட கால வரலாற்றைக் கொண்டதாகும்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திருந்து வழிபட்டு வரும் இந்த சக்திபீடம் அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்று என்பது இந்த பகுதியில் இருந்த பெரியார்கள் பலரின் கருத்தோட்டமாகும்.

பாண்டிய, சோழ ஆதிக்கப்போட்டியில், தோல்வியடைந்த பாண்டிய மன்னன் தனது தங்கத்தாலான சிம்மாசனம், உடைவாள், மணிமுடி, அரசமுத்திரை என்பவற்றை இலங்கை அரசனிடம் தான் இறக்கும் பொழுது கையளித்திருந்தான் என்பது வரலாறு.

பாண்டி நாடு மீது படை எடுத்த இராஜராஜன் என்ற சோழச் சக்கரவர்த்தி இந்த பெறுமதியான அரச சின்னங்களை இலங்கை அரசனிடமிருந்து பெறுவதற்காக இலங்கை மீது படை எடுத்தான்.

இலங்கையின் வடமேல் கரையோரமாக வந்திறங்கிய சோழப் படைகளின் ஒரு பிரிவு மண்டைதீவின் கிழக்கு கடற்கரை பகுதியில் தங்கியிருந்தது. சோழப்படைகள் இந்த முகாமில் தங்கியிருந்த வேளையில் முத்துமாரி அம்பாளைத் தரிசித்து வழிபட்டனர்.

இராஜராஜனின் மகன் இராஜேந்திரசோழன் பின்னர் வந்து அரச பொருள்களை மீட்டதுடன் இலங்கை முழுவதையும் கைப்பற்றி ஆட்சி நடத்தியதால் சோழப் படைகள் சில காலம் இங்கு தங்கி இருந்தன.

இத்தகைய பெரு வரலாறு கொண்ட மகா முத்துமாரி ஆலயம் கடந்த 18 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் திருவிழாக் கோலம் பூண்டுள்ளது.


யுத்த காலத்தில் சீரழிந்து தற்பொழுது புதுப்பொலிவுடன் வயற்கரை மாரி ஆலயம் விளங்குகிறது. இந்த வருடம் அன்னதான மடம் புதிதாக கட்டப்பட்டுள்ளது. திருநெல்வேலி சிற்ப ஆசாரிகளால் புதிய சித்திரத்தேர் அமைக்கப்பட்டு 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வெள்ளோட்டப் பூசை நடைபெற்றது.

### தேர்த்திருவிழா

இன்று வியாழக்கிழமை தேர் திருவிழா மதியம் 10 மணி அளவில் ஆரம்பமாகும். இந்த புனிதமான வேளை இடம்பெயர்ந்து யாழ் நகரம், அயல் பிரதேசம், கொழும்பு, பிற நாடுகளில் வதியும் சைவபெருமக்கள் அம்பாளின் திருவூர்திப் பவனி காண ஆலயத்தில் கூடுவது வழமை. அம்பாளின் அருள்மாட்சியும் திருக் காட்சியும் அற்புதமானது.

**"அம்பிகையை வணங்கினால் அதிக வரம் பெறலாம்"**
**"வாருங்கள் சேர்ந்து வடம் பிடிப்போம்"**

**கை. பேரின்பநாயகம்**
**"மண்டைதீவு மிகிழ்நன்'**



# ஈழத் தமிழரின் நெஞ்சங்களில் இன்றும் வலிக்கும் ஆறாத ரணங்கள்

## கறுப்பு ஜூலை இனக் கலவர செங்குருதி 35 வருடங்கள் கடந்தும் காயாத நிலையில்...

ஈழத்தில் மிகப்பெரிய கொடூரமாக அரங்கேறிய கறுப்பு ஜூலை எனப்படும் ஆடிக் கலவரம் நடந்தேறி 35 வருடங்களாகின்றன.

கறுப்பு ஜூலையை அனுபவித்த தமிழனால் மட்டுமல்ல அது தொடர்பில் அறிந்த அனைவராலும் மறக்க முடியாதபடி நெஞ்சில் பெரும் காயமாகவும் ஆறாத வடுவாகவும் மாறிப்போனது இந்த ஆடிக் கலவரம்.

ஈழத் தமிழ் மக்களிடத்தில் இந்தக் கறுப்பு ஜூலை தான், அவர்களின் வரலாற்றைதிருப்பிப் போடத் தொடங்கியது.

தமிழ் இனத்திற்கு விடுதலையும், நாடும், உரிமையும் தேவை என்கிற அவசியத்தை உணர்த்தியது.

1983 ஜூலை 23ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் திருநெல்வேலிப் பகுதியில் இலங்கை இராணுவத்தை இலக்கு வைத்துத் தாக்குதல் ஒன்றை நடத்தியிருந்தார்கள். விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் பலர் இந்த தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

இலங்கை இராணுவத்தினருக்கு எதிராக சிறிய அளவிலான தாக்குதல்களை நடத்தி வந்த புலிகள் முதன் முதலில் திருநெல்வேலியில் நடத்திய தாக்குதல் இராணுவத்தினருக்குப் பெரும் இழப்பைக் கொடுத்தது.

பலாலியில் இருந்து விடுதலைப் புலிகளை தாக்கும் திட்டத்துடன் வந்த இராணுவ அணியினரை இலக்கு வைத்து புலிகள் தாக்குதலை நடத்தினர்.

கண்ணிவெடித் தாக்குதலையும் துப்பாக்கிப் பிரயோகத்தையும் நடத்தியிருந்தார்கள். இந்த தாக்குதல் சமரில் 13 இலங்கை இராணுவத்தினர் கொல்லப்பட்டார்கள்.



விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இந்தத் தாக்குதலை அடுத்து கொல்லப்பட்ட இராணுவத்தினரின் சடலங்கள் கொழும்பிற்குக் கொண்டு செல்லப்பட்டன.

தமிழர்கள் சிங்களவர்களை கொன்று விட்டார்கள் என்றுகொதித்தெழுந்த சிங்களவர்கள்கொழும்பில்தமிழர்கள்வாழ்ந்த இடங்கள் எங்கும் தேடித் தேடி அழிக்கத் தொடங்கினார்கள்.

கொழும்பு நகரமே ஈழத் தமிழர்களின் இரத்தத்தில் நனைந்தது. கொழும்பில் வாழ்ந்த தமிழ் மக்களுக்கு எதிர்பாராத வகையில் இந்த வன்முறை மேற்கொள்ளப்பட்டது.

> இலங்கைத் தீவில் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன வெறிப் படுகொலைகள், வன்முறை நடவடிக்கைகள் எல்லாமே தமிழர்கள் மீதான அரசியல் உரிமை மறுப்பிற்காகவும் ஒடுக்கு முறைக்காகவுமே மேற்கொள்ளப்பட்டன.

கொழும்பு நகரில் வேரோடியிருந்த அவர்களின் வாழ்க்கை பலமாகவும் செழிப்பாகவும் இருந்தது. தமிழர்களோடு தமிழர்களிடமிருந்த வர்த்தக நிறுவனங்களும் வீடுகளும் இலக்கு வைக்கப்பட்டன.

தமிழர்கள் தெருத் தெருவாக பிடித்து வெட்டியும் அடித்தும் கொல்லப்பட்டார்கள். தமிழர்களின் வீடுகளைத் தேடிச் சென்று படு கொலைகளை நிகழ்த்தின பேரினவாத கும்பல்கள்.

வர்த்தக நிலையங்களை அடித்து நொருக்கி எரித்தார்கள். வன்முறைத் தாக்குதல்களில் தமிழர்களின் சொத்துக் களையும் சூறையாடினார்கள்.

கொழும்பில் உயிரைக் காக்க தமிழர்கள் அலைந்தார்கள்.

வயது முதிர்ந்தவர்கள் முதல் அனைவரும் இரக்கமற்ற முறையில் இதன் போது துன்புறுத்தி கொல்லப்பட்டார்கள். சுற்றிச் சுற்றி நடத்தப்பட்ட இந்தப் படுகொலை ஈழத் தமிழர்களை உலுப்பிப் போட்டது. தமிழ் இனத்தில் பெரும் காயத்தைக் கீறியது.

இந்தவன்முறைநாள்களில்இலங்கை முழுவதும் வன்முறைகள் நடத்தப்பட்டன. யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதை அடுத்து ஜூலை 24 மற்றும் 25ஆம் நாள்களில் இராணுவத்தினரால் படு கொலைகள் நடத்தப்பட்டன.

**திருநெல்வேலியில் தமிழர் 51 பேர் படுகொலை**

திருநெல்வேலிப் பகுதியில் 51 தமிழர்கள் புலிகள் என்ற பேரில் படுகொலை செய்யப்பட்டார்கள். இதைப்போலவே வெலிக்கடைச் சிறைச்சாலையிலும் தமிழ் அரசியல் கைதிகள் கொல்லப்பட்டார்கள். 53 தமிழ் அரசியல் கைதிகள் சக சிங்களக் கைதிகளால் துன்புறுத்திப் படுகொலைசெய்யப்பட்டார்கள்.

ஜூலை 25 அன்று 33 கைதிகளும் ஜூலை 28 அன்று 18 கைதிகளும் படுகொலை செய்யப்பட்டார்கள். இந்தப் படுகொலையின் பொழுதே குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் போன்ற போராளிகளும் படுகொலை செய்யப்பட்டனர். சிறைச்சாலையும் தமிழர்களின் இரத்தத்தில் நனைந்தது.

தமிழ் இனத்தை அழித்தொழிக்கவும் இலங்கைத்தீவிலிருந்து துடைத்தெறியவும் ஈழத் தமிழர்களின் அரசியலை முடக்கவும் இந்தப் படுகொலை நடத்தப்பட்டிருக்கிறது.

சிங்கள ஆட்சியாளர்களுக்கு எதிராக ஈழப் போராட்டம் மலர்ந்திருந்த அந்த நாட்களில் போராட்டத்தை முடக்கவே இந்தப் படுகொலை அப் போதைய அரசால் மிகத் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டதாகதெரிவிக்கப்படுகின்றது.

சுதந்திர இலங்கை எனக் கூறப்பட்ட காலத்தின் பின்னர் தமிழர்களின் அரசியலை முடக்கவும் இலங்கைத் தீவிலிருந்து தமிழர்களைத் துடைக்கவும்



இத்தகைய வன்முறைத் தாக்குதல்கள் முன்னதாகவே தொடங்கிவிட்டன எனவும் அதன் உச்சமாகவே கறுப்பு ஜூலை அரங்கேறியது எனவும் நம்பப்படுகின்றது.

ஈழ - இலங்கை அரசியல் நில முரண்பாட்டை கறுப்பு ஜூலைப் படுகொலையின் இரத்தம் தெளிவாக பிரித்து வரைந்திருக்கிறது. இலங்கைத்தீவை சிங்களவர்களிடம் வெள்ளையர்கள் கையளித்து விட்டுப் போனதிலிருந்து தமிழர்களுக்கான அரசியல் மற்றும் உரிமை நிராகரிப்புக்கள் ஏற்படத் தொடங்கின. தமிழர்கள் உரிமையற்றவர்களானார்கள்.

தமிழர்களிடத்தில் இருந்து சிறியளவான அரசியல் இடங்களும் சிங்கள ஆளும் தரப்புக்குப் பிரச்சினையாக இருந்தது. தமிழ் அரசியல் தலைவர்கள் சிறுபான்மைத் தமிழர்களின் உரிமைகளை கோரி வந்த சூழலில் தமிழர்களும் சிங்களவர்களும் ஒன்றாக இருந்த பிரதேசங்களில் ஒடுக்குமுறைகளும் இன வன்முறைகளும் மேற்கொள்ளப்பட்டன.

1948ல் இலங்கை சுதந்திரமடைந்ததைத் தொடர்ந்து தனிச்சிங்களச் சட்டமும் பௌத்த மயமாக்கலும் பிரகடனப்படுத்தப்பட்ட வேளை தமிழர்கள் மீதான வன்முறைகளும் ஒடுக்குமுறைகளும் மிகச் சாதாரணமாகத் தொடங்கப்பட்டன.

**கல்லோயா படுகொலைகள்**

1956இல் ஈழத் தமிழர்களுக்கு எதிரான முதலாவது வன்முறை தாக்குதல் கல்லோயா குடியேற்றத்த திட்டத்தில் அரங்கேற்றப்பட்டது. இதில் 150 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.

சிங்கள மொழியை ஆட்சி மொழியாக அறிவித்தத்தைத் தொடர்ந்து தமிழ் அரசியல் தலைவர்கள் சாத்வீக போராட்டத்தில் ஈடுபட்ட பொழுது அவர்கள் மீதும் வன்முறைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்தே கல்லோயா குடியேற்றத் திட்டத்தில் இனவெறி வன்முறை வெடித்தது. இந்தத் தாக்குதலும் ஈழப் போராட்டத்தின் அவசியத்தை தமிழர்களுக்கு உணர்த்தி அவர்களின் தாயகம் பற்றிய அக்கறையை ஏற்படுத்தியது.

**1958 இலும் இனக் கலவரம்**

மீண்டும் 1958இல் இனக் கலவரம் வெடித்தது. பொலனறுவையில் தொடங்கி கொழும்பு வரை நடந்த இந்த தாக்குதலில் 300 தமிழர்கள் கொல்லப்பட்டார்கள்.

இந்தத் தாக்குதலின் பொழுது தமிழர்களும் திருப்பி சிங்களவர்களைத் தாக்கத் தொடங்கியிருந்தார்கள். கத்திகளுடனும் பொல்லுகளுடன் வந்த சிங்களவர்கள் தமிழர்களை வெட்டி, குத்தி தீயிட்டு எரித்தார்கள்.

இதனைத் தொடர்ந்து 1974ல் யாழ்ப்பாணத்தில் நடந்த உலகத் தமிழராய்ச்சி மாநாட்டின் பொழுது 11 பேர் இலங்கை பொலிஸாரால் படுகொலை செய்யப்பட்டார்கள்.

1977ல் மீண்டும் நடத்தப்பட்ட தாக்குதலில் 500 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டார்கள். இதில் அநுராதபுரம் பகுதியில் ரயிலில் செல்ல காத்திருந்த தமிழர்கள் வெட்டிச் சாய்த்துக் கொல்லப்பட்டனர்.

இதனுடைய தொடர்ச்சியான வன்முறையாக 1981ல் யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டது. தென் கிழக்காசியாவில் மிகப் பெரிய நூலமாக 97 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புத்தகங்களுடன் இருந்த யாழ். நூலகம் ஈழத் தமிழ் மக்களின் வரலாற்று, பண்பாட்டு, அறிவுப் பொக்கிசமாக விளங்கியது. அந்த யாழ். நூலகத்தை 31 மே 1981 அன்று தீயிட்டு எரித்து அழித்தார்கள்.

தமிழர்கள் மீதான வன்முறைகள், அரசியல்நோக்கங்களுக்காக திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுவந்ததைத் போலவே யாழ். நூலக தீயிடலும் அரசியல் பழிவாங்கலாக நடத்தப்பட்டது. இந்த வன்முறையில் யாழ். நூலகத்துடன் நான்கு பேர் கொல்லப்பட்டனர்.

இலங்கைத் தீவில் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இனவெறிப் படுகொலைகள், வன்முறை நடவடிக்கைகள் எல்லாமே தமிழர்கள் மீதான அரசியல் உரிமை மறுப்பிற்காகவும் ஒடுக்கு முறைக்காகவுமே மேற்கொள்ளப்பட்டன.

அதனுடைய உச்சக்கட்ட வன்முறையாக நிகழத்தப்பட்ட கறுப்பு ஜூலை ஏற்கனவே அந்தக் காலப் பகுதியில் அப்போதைய அரசால் திட்டமிடப்பட்டிருந்தது.இத்தனை ஆண்டுகள் கடந்தென்ன என்றும் ஈழத் தமிழ் இனத்தின் நெஞ்சில் காயாத இரத்தமாக கறுப்பு ஜூலையும் வலித்துக் கொண்டுதானிருக்கிறது. *




# கல்விக் கதிர் வெளியீடு 07

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்

### பகுதி - II

29.இலங்கையின் அரச இலச்சினையில் காணப்படும் குறியீடு
1. அரசம் இலை 2. அன்னம் 3. புறா 4.சந்திரன்

30. இலங்கை அமைந்திருப்பது இந்தியாவுக்கு
1. வடக்கே 2. தெற்கே 3. மேற்கே 4. கிழக்கே

31.அசுத்தமான நீரைக் குடிக்கும் போது ஏற்படும் நோய்
1. டெங்கு
2. மஞ்சட்காமாலை
3. கயரோகம்
4. பறவைக்காய்ச்சல்

32. தேசப் படங்களில் நதிகளைக் காட்டப் பயன்படுத்தப்படும் நிறம்
1. சிவப்பு 2. நீலம் 3. மஞ்சள் 4. கபிலம்

33. பட்டடை பயன்படுத்தப்படுவது
1. தச்சன் வேலைத்தளத்தில்
2. கொல்லன் கம்மாலையில்
3. வயலில்
4. சுரங்கத்தில்

34. நீர்ப் பாத்திரத்தில் இடும் போது நீரில் மிதக்கும் பொருள்
1. இரும்பாணி
2. கல்
3. பனிக்கட்டி
4. நாணயக்குற்றி

35.வயல் வேலைகளின் போது பயன்படுத்தப்படும் உபகரணம்
1. நுகத்தடி 2. வனைசில்லு 3. வாள் 4. மணியாசு

36.தேசிய இலச்சினையில் தார்மீகத்தைக் குறிப்பது
1. நெற்கதிர்
2. தர்மச்சக்கரம்
3. மலரிதழ்
4. நிறைகழசம்

37. உப்புத்தூள் விரைவாகக் கரைவது
1. தண்ணீரில்
2. வெந்நீரில்
3. குளிரூட்டியநீரில்
4. கொதித்தாறியநீரில்

38.ஆங்கில ஆட்சியில் இருந்து இலங்கை சுதந்திரம் பெற்றது 1948 ஆம் வருடம்
1. ஏப்ரல் 14 இல் 2. மே22 இல் 3. பெப்ரவரி 4 இல்

39. ஏ9 வீதி இணைக்கும் நகரங்கள்
1. கொழும்பு – கண்டி 2. கண்டி - யாழ்ப்பாணம் 3. கொழும்பு –காலி

40.இலங்கையின் அரச இலச்சினையில் காணப்படாத குறியீடு
1. மலரிதழ் 2. வாளேந்திய சிங்கம் 3. அரசமிலை

41. இலங்கையின் மேற்கே காணப்படுவது
1. இந்தியா 2. ஆபிரிக்கநாடுகள் 3. மலேசியா

42. நிறக் கடதாசித் துண்டுகளை கிழித்து ஒட்டிச் செய்யப்படும் ஆக்கம்
1. பரவுரூபம் 2. அல்பனா 3. கொலாஜ்

43. இரவு வானில் காண முடியாதது
1. நட்சத்திரங்கள் 2. எரிகற்கள் 3. வானவில்

44. இலங்கை அமைந்துள்ள சமுத்திரம்
1. அத்திலாந்திக் 2. இந்து 3. பசுபிக்

45. சந்திர கிரகணம் ஏற்படுவது
1. பௌர்ணமிக்கு முந்திய தினத்தில்
2. பௌர்ணமி தினத்தில்
3. அமாவாசை தினத்தில்

46. நீரை உறிஞ்சும் பொருள் அல்லாதது
1. கடதாசி
2. காட்போட் அட்டை
3. சீலைத் துண்டு
4. றெஜிபோம் துண்டு

47




எழுத்து A இனால் காட்டப்படும் புவின் பகுதி
1. அல்லி 2. குறி
3. புல்லி 4. தம்பம்

## சிறுவர் பொய்கை



### 7 வித்தியாசங்கள் கண்டுபிடியுங்கள்




### பீர்பாலின் புத்திசாலித்தனம்



பீர்பால், அறிவாற்றலும் புத்திக்கூர்மையும் உள்ளவர். எவ்வளவு பெரிய சிக்கலையும், தமது அறிவுத் திறமையாலே சமாளித்து விடுவார் என்று கேள்விப்பட்ட காபூல் அரசருக்கு, பீர்பாலின் அறிவாற்றலை ஆராய்ந்து அறிய ஆவல் ஏற்பட்டது.

அதனால் ஒரு கடிதத்தில், "மேன்மை தங்கிய அக்பர் சக்ரவர்த்தி அவர்களுக்கு, ஆண்டவன் தங்களுக்கு நலன்கள் பலவும், வெற்றிகள் பலவும் தருவாராக. தாங்கள் எனக்கு ஒரு குடம் அதிசயம் அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன்" என்று எழுதி கையெழுத்துப் போட்டு, தூதுவன் மூலமாக அக்பருக்கு அனுப்பினார் காபூல் அரசர்.

கடிதத்தைப் படித்த அக்பர் திகைத்து, ஒரு குடம் அதிசயம் அனுப்புவதா? ஒன்றுமே புரியவில்லையே என்று குழம்பி, அரண்மனையை சுற்றி வளம் வந்தார். அக்பர் முகம் குழப்பத்தில் இருப்பதை பீர்பால் கண்டார். பீர்பால் அக்பரிடம் சென்று இதுபற்றி வினவினார்.

அக்பர் கடிதத்தை பீர்பாலிடம் கொடுத்தார். அந்தக் கடிதத்தை படித்தார் பீர்பால். பீர்பால் நீண்ட சிந்தனைக்கு பிறகு, அக்பரிடம் மூன்று மாதத்தில் அதிசயம் அனுப்புவதாக பதில் எழுதுமாறு சொன்னார்.

அக்பர், பீர்பாலிடம், ஒரு குடம் அதிசயம் எப்படி அனுப்புவீர்? என்று விசாரித்தார்.

அதுக்கு பீர்பால், மூன்று மாதம் கழித்து அந்த அதிசயத்தைப் பாருங்களேன்.

பீர்பால் யோசித்துக்கொண்டே அவர் வீட்டுக்குப் புறப்பட்டார்.

பின்பு, பீர்பால் ஒரு மண் குடத்தை எடுத்தார். ஒரு பூசணிக் கொடியில் காத்திருந்த பூசணிப்பிஞ்சு ஒற்றை கொடியோடு மண் குடத்துக்குள் வைத்தார். வைக்கோலால் குடத்ததை மூடினார்.

நாளாக நாளாக பூசணிப் பிஞ்சு குடத்திற்குள்ளேயே நன்றாக வளர்ந்தது. குடம் நிறையுமளவுக்கு பூசணிக்காய் வளர்ந்ததும், பூசணிக்காயைத் தவிர மற்ற வைக்கோல், கொடி, காயின் காம்பு எல்லாவற்றையும் கத்தரித்து விட்டார் பீர்பால்.

இப்போ அந்தக் குடத்தை அக்பரிடம் காட்டினார் பீர்பால். அக்பருக்கு ஆச்சரியம். குடத்தின் வாயோ உள்ளே இருக்கும் பூசணிக்காயை விட மிகவும் சிறியது. இதனுள் இவ்வளவு பெரிய பூசணிக்காயை எப்படி நுழைத்தாய்?

பீர்பால் அதை விளக்கிவிட்டு, அந்தப் பூசணிக்காய் குடத்தை அப்படியே காபூல் அரசனுக்கு, அதிசயம் என்று அனுப்பச் சொன்னார் அக்பர். தூதுவன் மூலமாக ஒரு கடிதத்தையும் அந்தக் குடத்தையும் அனுப்பினார்.

கடிதத்தை காபூல் அரசன் பிரித்துப் படித்தார். அதில் நீங்கள் கேட்டது போலவே ஒரு குடம் அதிசயத்தை அனுபியிருக்கிறேன். என எழுதியிருந்தார்..

குடத்தின் மேல் இருந்த உரையை பிரித்தார் காபூல் அரசன்! அவரால் அதை நம்ப முடியவில்லை. காரணம் குடத்தின் வாயோ சிறியது. அதற்குள் எப்படி பெரிய பூசணிக்காய் வைத்தார் என்று அவருக்குப் புரியவில்லை. அன்று இரவு முழுவதும் இதையே நினைத்துக்கொண்டு இருந்தார்.

அடுத்த நாள் காபூல் அரசன் விஜய நகரம் புறப்பட்டார்.

காபூல் அரசன் இரண்டு நாள்களுக்கு பின்னர் விஜய நகரத்தை அடைந்தார். அவர் அக்பரிடம் சென்று விசாரித்தார். அதற்கு அக்பர் இதை நான் சொல்வதை விட பீர்பால் சொன்னால் நன்றாக இருக்கும் என்று சொன்னார்.

பின்பு அக்பர் மற்றும் காபூல் அரசன் இருவரும் பீர்பாலை சந்தித்தனர். பீர்பாலும் அதை எவ்வாறு செய்தான் என்று விளக்கினார்.

அதைக் கேட்ட காபூல் அரசன் பீர்பாலின் புத்திக்கூர்மையை எண்ணி வியந்தார்.

# விலங்குகள் சரணாலயம் அமைப்பதற்கு காணி வழங்கும் நடவடிக்கையை நிறுத்தவும்

## மட்டு. எம்.பி. யோகேஸ்வரன்



மட்டக்களப்பு மாவட்டத்தின் குடும்பிமலை பகுதியில் விலங்குகள் சரணாலயம் அமைக்க 2500 ஹெக்டேயர் காணி வழங்கும் நடவடிக்கையை நிறுத்துமாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டு. மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள குடும்பிமலை பகுதியில் 2500 ஹெக்டேயர் நிலப்பரப்பை ஒரு தனி நபருக்கு விலங்குகள் சரணாலயம் அமைக்கக்குத்தகைக்கு வழங்க அரசால் இரகசியமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை தொடர்பாக மாவட்ட அரச அதிபருக்கு அவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அக் கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

கோறளைப்பற்று, தெற்கு கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் குடும்பிமலையை அண்டியதாக 2500 ஹெக்டேயர் நிலப்பரப்பை ஒரு தனி நபருக்கு குத்தகைக்கு விலங்குகள் சரணாலயம் அமைக்க அரசு இரகசியமாக வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிந்துள்ளேன்.

கோறளைப்பற்று, தெற்கு கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் வனவிலங்கு சரணாலயம் ஒன்றை அரசு அமைப்பதில் தடையில்லை. காரணம் சுற்றுலாத் துறையை விருத்தி செய்யலாம். ஆனால் ஆயிரக்கணக்கான ஹெக்டேயர் காணிகளை தனி நபருக்கு குத்தகைக்கு வழங்கி விலங்கு சரணாலயம் அமைக்கும் திட்டத்தை எதிர்க்கின்றோம். அத்துடன் இச்செயற்பாடானது தமிழ்மக்களின் எதிர்காலத்தை பாதிக்கும்.

எனவே இரகசியமாக அரசு மேற்கொள்ளும் இத்திட்டத்திற்கு எதுவித அனுமதியும் வழங்க வேண்டாம் என தங்களை கோருவதுடன் இவ் விடயம் குறித்து விரிவாக ஆராய்வதற்கு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் நிகழ்ச்சி நிரலில் இதனை இணைத்துக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கண்டி, திகண சம்பவம் தொடர்பான கைதிகளை விடுதலை செய்யுங்கள்!

## ஞானசார தேரர் கூறுகிறார்



கண்டி, ஜூலை 26

திகண சம்பவ கைதிகளை உடன் விடுதலை செய்யுங்கள் என பொது பலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தேஞான சார தேரர் வேண்டுகோள் விடுத்தார்.

உடனடியாக ஏதாவது ஒரு வழக்கைத்தாக்கல் செய்து என்றாலும், சிறையிலுள்ள இந்த இளைஞர்களுக்கு பிணை வழங்கி சிறையிலிருந்து விடுவித்து சமூகத்தில் செயற்படுவதற்கு வசதிகளை செய்து கொடுக்குமாறு நாம் இந்த நாட்டில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டு கோள் விடுக்கின்றோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

திகண இனவாத சம்பவத்தில் ஈடுபட்டனர் எனக்குற்றம் சாட்டப்பட்டு தற்பொழுது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களின் சுகதுக்கங்களை விசாரிப்பதற்கு நேற்றுமுன்தினம் தேரர் உட்பட ஒரு குழுவினர் போகம் பரைச்சிறைச்சாலைக்கு சென்றிருந்தனர்.

இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே தேரர் இதனைக் கூறினார்.

கண்டி திகண சம்பவத்தில் சில பிள்ளைகள் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் சிலருடைய வயது 16 - 17 இற்கு இடைப்பட்டதாக காணப்படுகின்றது. இதில், அடுத்த மாதம் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் சிறிய பௌத்த பிக்குவும் இருக்கின்றார்.

17 கிலோமீற்றருக்குள் ஒரு பிரச்சினை நடைபெறும் போது இந்த நாட்டின் பாதுகாப்புப் பிரிவினர்தான் அதன் பொறுப்பை ஏற்க வேண்டும். இந்தப் பிரச்சினையை உருவாக்கியவர்கள் யார் என்பது தொடர்பில் இதுவரையில் எந்தவித முடிவுகளும் வெளிவரவில்லை.

காலியில், அளுத்கமையில், அம்பாறையில், கம்பளையில் அதனையடுத்து திகணவில் சம்பவங்கள் இடம்பெற்றன. துரதிஷ்டம் என்னவென்றால், இறுதியில் இந்த நாட்டின் நிருவாகிகள் ஒவ்வொரு காரணத்தை உருவாக்கி தமது மானத்தை மறைத்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுப்பதாகவும் தேரர் குற்றம் சாட்டினார்.

# பெண்களுக்கான தற்காலிக பாதுகாப்பு மத்திய நிலையங்களில் வசதிகள் மேம்படுத்தத் திட்டம்



கொழும்பு, ஜூலை 26

வன்முறைகளுக்கு உள்ளாகும் பெண்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கான தற்காலிக பாதுகாப்பு மத்திய நிலையங்களின் வசதிகள் விரிவுபடுத்தப்படவுள்ளன.

இதற்கு மகளிர் மற்றும் சிறுவர்கள் அலுவல்கள் அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, கொழும்பு மற்றும் மாத்தறை ஆகிய பகுதிகளில் உள்ள வன்முறைகளுக்கு உள்ளான பெண்களுக்காக பாதுகாப்பு வழங்குவதற்கென அமைக்கப்பட்டுள்ள தற்காலிக பாதுகாப்பு மத்திய நிலையங்களை நிர்வகிப்பதற்காக women In Need மற்றும் Jaffna Social Action Center ஆகிய நிறுவங்களுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையை எட்டுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்த மத்திய நிலையங்களை முறையாக முகாமைத்துவம் செய்வதற்கான பொருத்தமான பணியாளர் சபை மற்றும் ஏனைய வசதிகளை அரசால் வழங்குவதற்கு என்று மகளிர் மற்றும் சிறுவர்கள் அலுவல்கள் அமைச்சர் சந்திராணி பண்டார சமர்ப்பித்த ஆவணத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## விஜயகலா விவகாரம்;

# சபாநாயகர் மீண்டும் கடிதம்

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு, மீண்டும் உருவாக வேண்டுமென முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஆற்றிய உரைதொடர்பில், கூடிய விரைவில் வியாக்கியானத்தை தருமாறு சபாநாயகர் கரு ஜயசூரிய, சட்டமா அதிபருக்கு மீண்டும் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

ஞாபகமூட்டும் வகையிலேயே மேற்படி கடிதத்தை சபாநாயகர் கரு ஜயசூரிய அனுப்பிவைத்துள்ளாரென சபாநாயகர் காரியாலய தகவல்கள் தெரிவிக்கின்றன.

# காட்டு யானை தாக்கி ஒருவர் பலி!





மட்டக்களப்பு செங்கலடி பிரதேசத்தில் உள்ள வந்தாறுமூலைப் பகுதியில் நேற்றுக் காலை காட்டு யானை தாக்கியதில் குடும்பத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பாலமடு தெற்கு கிராமசேவகர் பிரிவிலுள்ள மாவடிவேம்பு இலக்கம் இரண்டைச் சேர்ந்த 65 வயதுடைய விஸ்வலிங்கம் ஏரம்பமூர்த்தி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலை தமது கால்நடைகளை பார்வையிடசைக்கிளில்சென்றபோது காட்டுபாதையில் மறைந்திருந்த யானை இவரை தாக்கிக் கொன்றுள்ளது என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

# பண மோசடியில் ஈடுபட்ட ஆபிரிக்க பிரஜை கைது

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் தங்கியிருந்து பல்வேறு பண மோசடி சம்பவங்களில் ஈடுபட்டு வந்த ஆபிரிக்க பிரஜையொருவரை கைதுசெய்துள்ளோம் என கம்பஹா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் கம்பஹா பிரதேசத்தைச் சேர்ந்தவர்களிடம் ஆசைவார்த்தைகளை கூறி, வங்கிகளில் அவர்களது பெயரில் வங்கி கணக்குகளை ஆரம்பிக்கச் செய்துள்ளார். அதன் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட வங்கி கணக்குகளின் மூலம் சந்தேகநபர் நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

இவர் இலங்கை பிரஜைகளுக்கு இணையத்தில் லொத்தர் பரிசு கிடைக்கப்பெற்றுள்ளது எனவும் அதனை பெற்றுக்கொள்ள சுங்கத்திற்கு வரிச் செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்து, அப்பணத்தொகையை குறித்த வங்கி கணக்குகளுக்கு செலுத்துமாறும் கூறியுள்ளார்.

இவ்வாறு அந்த வங்கி கணக்குகளுக்கு செலுத்தப்பட்ட பணத்தொகையை வங்கியிலிருந்து மீளப்பெற்றுக்கொள்வதற்காக நேற்று முன்தினம் மாலை நான்கு மணியளவில் கம்பஹா பிரதேசத்தில் தனியார் வங்கியொன்றுக்கு சென்ற வேளையிலேயே கம்பஹா பொலிஸார் அவரைக் கைதுசெய்தனர்.

இவரைக் கைது செய்த வேளையில் அவரிடமிருந்து இலங்கையர்கள் சிலரின் பெயர்களில் ஆரம்பிக்கப்பட்ட வங்கி கணக்கு புத்தகங்களும், அதற்கு பயன்படுத்தக்கூடிய வங்கி அட்டைகளும், அதன் மூலம் பெறப்பட்ட ஒரு லட்சத்து 13 ஆயிரம் ரூபா பணமும் மீட்கப்பட்டன.

கம்பஹா பொலிஸார் அவரை நேற்று கம்பஹா நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தி, மேலதிக விசாரணைகளுக்காக குற்றவியல் விசாரணை பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## எலும்புக்கூடு அகழ்வு :

# நேரடியாக பார்வையிட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலக அதிகாரிகள்

மன்னார், ஜூலை 26

மன்னாரில் நடைபெற்றுவரும் மனித எச்சங்களுக்கான அகழ்வு பணிகளை காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலக அதிகாரிகள் நேரடியாக பார்வையிட்டதுடன் நிலைமைகளை அறிந்தும் கொண்டனர்.

மன்னார் சதொச விற்பனை கட்டுமானப் பணியின்போது கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்களை கண்டறியும் அகழ்வுப் பணி தொடர்ந்து நேற்றுடன் 41 ஆவது தினங்களாகத் தொடர்கிறது.

நேற்று வரைக்கும் 32 எலும்புக்கூடுகள் வெளியேற்றப்பட்டுள்ளன என்றும் 52 எலும்புக்கூடுகள், மண்டையோடுகள் அடையாளமிடப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் அகழ்வுப் பணியின்போது 75 சென்றி மீற்றர் நீளம் கொண்ட எலும்புக்கூடு ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டுள்ளதால் இது ஒரு சிறுவருடையதாக இருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது.

அத்துடன் காணாமல் ஆக்கப்பட்டோர் கொழும்பு அலுவலகத்திலிருந்து இரு அதிகாரிகள் நேற்று இப் பகுதிக்கு வருகை தந்து இங்கு நடைபெற்று வரும் அகழ்வு பணிகளை நேரடியாக பார்வையிட்டதுடன் நிலைமைகளையும் இதற்கு பொறுப்பாக இருக்கும் சட்ட வைத்திய அதிகாரியிடம் கேட்டு அறிந்து கொண்டனர்.

# ஜப்பானை வாட்டியெடுக்கும் அனல் காற்று; 65 பேர் சாவு; தேசிய பேரிடராக அறிவிப்பு



டோக்கியோ, ஜூலை 26

ஜப்பானில் நிகழும் கடும் வெயில், அனல் காற்று காரணமாக 65 பேர் பலியாகி உள்ளனர். ஜப்பான் வானிலை ஆராய்ச்சி அமைப்பு இந்த அனல் காற்றை தேசிய பேரிடராக அறிவித்து உள்ளது.

ஜப்பானில் இதுவரை இல்லாத அளவுக்கு கடும் வெயில் வறுத்தெடுத்து வருகிறது. அனல் காற்றும் வீசுகிறது. அங்கு அதிகபட்சமாக குமகாயா என்ற இடத்தில் கடந்த திங்கட்கிழமை 106 டிகிரி (பாரன்ஹீட்) வெயில் பதிவாகி உள்ளது. ஜப்பான் வரலாற்றில் இதுவே அதிகபட்ச வெப்பநிலை என தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஓகஸ்ட் மாத தொடக்கம் வரையில் அங்கு அதிகபட்சமாக 95 டிகிரி வெப்பநிலை தொடரும் என அந்த நாட்டின் வானிலை ஆராய்ச்சி அமைப்பு கூறி உள்ளது. வறுத்தெடுக்கும் வெயிலால் ஆயிரக்கணக்கான மக்கள் பாதிப்புக்கு ஆளாகி உள்ளனர். கடும் வெயிலில் மயங்கி விழுந்து 22 ஆயிரம் பேர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெறுகின்றனர். கடந்த 1 வாரத்தில் அனல் காற்றுக்கு 65 பேர் பலியாகி உள்ளனர்.

இதையடுத்து ஜப்பான் வானிலை ஆராய்ச்சி அமைப்பு, இந்த அனல் காற்றை தேசிய பேரிடராக அறிவித்து உள்ளது. அதிக தண்ணீர் பருகுமாறும், ஏ.சி. வசதியை பயன்படுத்துமாறும் பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# மெக்சிகோவில் பத்திரிகையாளர் சுட்டுக் கொலை!

மெக்சிகோ சிட்டி, ஜூலை 26

மெக்சிகோ நாட்டில் பத்திரிகையாளர்களை குறிவைத்து மீண்டும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மெக்சிகோ நாட்டின் கான்கன் நகரில் உள்ள குயிண்டானா ரூ என்ற பகுதியில் அமைந்துள்ள ரிசார்ட்டில் தங்கி இருந்தார் ரூபன் பாட். இவர் அதே பகுதியில் இணையதள பத்திரிகையை நடத்தி வந்தார்.

இந்தநிலையில், ரூபன் பாட் நேற்றுமுன்தினம் ரிசார்ட்டில் தங்கியிருந்தார். அப்போது அங்கு வந்த மர்ம நபர்கள் தாங்கள் கொண்டு வந்த துப்பாக்கியால் ரூபனை சரமாரியாகச் சுட்டனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டில் ரூபன் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியானார். கடந்த ஒரு மாத காலத்தில் பத்திரிகையாளர் மீது நடைபெற்ற இரண்டாவது தாக்குதல் இதுவாகும். ஏற்கனவே ரூபன் பாட்டுக்கு கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# கிரீஸ் நாட்டில் பற்றி எரியும் காட்டுத் தீ; உயிரிழப்பு எண்ணிக்கை 74 ஆக அதிகரிப்பு

கிரீஸ் நாட்டில் பற்றி எரியும் காட்டுத் தீயில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 74 ஆக அதிகரித்துள்ளது. தீயைக் கட்டுப்படுத்தும் பணி தீவிரமாக நடந்து வருகிறது என அந்தநாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

கிரீஸ் நாட்டின் ஏதென்ஸ் நகர் அருகில் உள்ள அட்டிகா பிராந்தியத்தில் கடந்த திங்கட்கிழமை திடீரென காட்டுத்தீ ஏற்பட்டது. கடற்கரையை ஒட்டியுள்ள வனப்பகுதியில் பற்றிய தீ, மற்ற பகுதிகளுக்கும் வேகமாக பரவத் தொடங்கியது. இதனால் அந்தப்பகுதி முழுவதும் கடும் புகைமூட்டமாக காட்சியளிக்கிறது.

தீ விபத்து ஏற்பட்டதைத் தொடர்ந்து பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வேறு இடங்களுக்கு தப்பி ஓடினர். எனினும் பலர் தீயில் சிக்கிக்கொண்டனர்.

சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகள் மற்றும் 200இற்கும் மேற்பட்ட வாகனங்கள் தீயில் கருகி சேதமடைந்தன. வனப்பகுதி வழியாக கார்களில் சென்ற பயணிகளும் தீயில் சிக்கிக்கொண்டனர்.

முதல் கட்டமாக 7 பேர் உயிரிழந்தனர் என்றும், 50இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர் எனத் தகவல் வெளியானது.

தொடர்ந்து நடைபெற்ற மீட்பு பணிகளில் தீயில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 60ஐ தாண்டியதாக அரசு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தநிலையில், இந்த தீ விபத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 74 ஆக உயர்ந்துள்ளது என அந்தநாட்டு பிரதமர் தெரிவித்துள்ளார். மேலும், தீயை கட்டுக்குள் கொண்டு வரும் பணியில் நூற்றுக்கணக்கான தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டு வருகின்றனர். (கு)

# தாய்லாந்து சிறுவர்களை காப்பாற்றிய நீச்சல் வீரர்களுடன் தெரசா மே சந்திப்பு

லண்டன், ஜூலை 26

தாய்லாந்தில் குகையில் சிக்கிக் கொண்ட சிறுவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்ட இங்கிலாந்தின் நீச்சல் வீரர்களை பிரதமர் தெரசா மே நேற்றுமுன்தினம் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

தாய்லாந்தின் சியாங் ராய் பகுதியில் உள்ள தாம் லுவாங் குகையைப் பார்வையிடச் சென்ற 12 சிறுவர்கள் மற்றும் அவர்களின் உதைபந்து பயிற்சியாளர் கடந்த மாதம் 23 ஆம் திகதி குகைக்குள் சிக்கிக் கொண்டனர்.

குகையில் 17 நாள்களாக சிக்கி தவித்த உதை பந்து பயிற்சியாளர் மற்றும் சிறுவர்கள் 12 பேர் அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்டு சியாங் ராய் நகரில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். சியாங் ராய் நகரில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த அவர்கள் அனைவரும் கடந்த வாரம் வீடு திரும்பினர்.



இந்தநிலையில், தாய்லாந்து குகையில் சிக்கிக் கொண்ட சிறுவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்ட இங்கிலாந்தின் நீச்சல் வீரர்களை பிரதமர் தெரசா மே நேற்றுமுன்தினம் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

பிரதமரின் வீடு மற்றும் அலுவலகத்துக்கு வரவழைக்கப்பட இங்கிலாந்தின் நீச்சல் வீரர்களை அந்த நாட்டு பிரதமர் தெரசா மே சந்தித்து வாழ்த்து தெரிவித்துள்ளார். (கு)

# பாகிஸ்தான் தேர்தலை உன்னிப்பாக கவனித்து வருகிறோம்: அமெரிக்கா!



வொஷிங்டன், ஜூலை 26

பாகிஸ்தானில் நடைபெற்று வரும் தேர்தல் ஏற்பாடுகளை உன்னிப்பாக கவனித்து வருகிறோம் என அமெரிக்க செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் பஞ்சாப் உள்ளிட்ட மாகாணங்களுக்கான தேர்தலும், நாடாளுமன்ற தேர்தலும் நேற்று நடைபெற்றன. இந்தத் தேர்தலில் பாகிஸ்தான் முஸ்லிம் கட்சி, தெஹ்ரீக் இ இன்சாப் மற்றும் பாகிஸ்தான் மக்கள் கட்சி ஆகிய 3 முதன்மை கட்சிகள் போட்டியிட்டன.

இதில், முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சிக்கும், இம்ரான் கான் தலைமையிலான தெஹ்ரீக் இ இன்சாப் கட்சிக்கும் இடையே கடுமையான போட்டி நிலவி வருகிறது.

அசம்பாவிதங்களை தடுக்கும் வகையிலும், பொதுமக்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கும் வகையிலும் 3 லட்சத்து 71 ஆயிரத்து 388 வீரர்கள் பணியமர்த்தப்பட்டனர் என பாகிஸ்தான் ராணுவ வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

இந்தநிலையில், பாகிஸ்தானில் நடைபெற்று வரும் தேர்தல் ஏற்பாடுகளை உன்னிப்பாக கவனித்து வருகிறோம் என அமெரிக்க செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் கூறுகையில்,

பாகிஸ்தானில் நடைபெறும் தேர்தல் ஏற்பாடுகளை உன்னிப்பாக கவனித்து வருகிறோம். இந்த தேர்தலில் பாகிஸ்தானியர்கள் அனைவரும் அமைதியை கடைப்பிடித்து தங்களின் வாக்குகளை பதிவிட வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் வைத்தியசாலையில் சேர்ந்து சிகிச்சை பெற மறுப்பு


இஸ்லாபாத், ஜூலை 26

சிறையில் அடைக்கப்பட்டு உள்ள பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் வைத்தியசாலையில் சேர்ந்து சிகிச்சை பெற மறுப்பு தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப், ஊழல் பணத்தில் லண்டன் நகரில் 'அவென்பீல்டு' சொகுசு வீடுகள் வாங்கி குவித்த வழக்கில் 10 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, ராவல் பிண்டி அடியலா சிறையில் அடைக்கப்பட்டார்.

அவர் இதய நோயாளி ஆவார். நீரிழிவு நோயும் இவருக்கு உள்ளது. இந்த நிலையில் அவர் நீர்ப்போக்கு பிரச்சினையால் கடும் அவதிக்கு ஆளாகி உள்ளார். அவரை நேற்றுமுன்தினம் 'பிம்ஸ்' என்று அழைக்கப்படுகிற பாகிஸ்தான் மருத்துவ அறிவியல் கல்லூரி மருத்துவர்கள் குழுவினர் பரிசோதித்தனர்.

இதுபற்றி பரிசோதனை குழுவில் இடம் பெற்றிருந்த ஒரு டாக்டர் கூறும்போது -



அவரது ரத்தத்தில் யூரியாவின் அளவு கிட்டத்தட்ட 50 சதவீதம் அதிகமாக இருப்பது தெரியவந்தது. நீர்ப்போக்கு பிரச்சினையும் கடுமையாக உள்ளது. இ.சி.ஜி. பரிசோதனையும் செய்யப்பட்டது. அவரது கடந்த கால பிரச்சினைகளும் கேட்டு கவனத்தில் கொள்ளப்பட்டன. அவர் ஏற்கனவே எடுத்து வருகிற மாத்திரை, மருந்துகளை தொடருமாறு அறிவுறுத்தப்பட்டார் என்று குறிப்பிட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமையன்றும் 2 மருத்துவர்களை கொண்ட குழு நவாஸ் ஷெரீப்பை பரிசோதித்து, அவரை ஆஸ்பத்திரியில் சேர்ந்து, தொடர்ந்து சிகிச்சை செய்துகொள்ளுமாறு பரிந்துரை செய்தது.

ஆனால் அவர் அதை ஏற்க மறுத்துவிட்டார். சிறையிலேயே சிகிச்சை பெறுகிறேன் எனக் கூறி விட்டார் என்று தகவல் அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இது குறித்து ஓய்வு பெற்ற ராணுவ டாக்டர் அசார் முகமது கியானி கருத்து தெரிவிக்கையில்,

அவரது இதயத்துடிப்பு இயல்பாக இல்லை என்பதாலும், ரத்தத்தில் யூரியாவின் அளவு அதிகமாக இருப்பதால் சிறுநீரகத்தை பாதிக்கலாம் என்பதாலும் வைத்தியசாலையில் சேர்ந்து சிகிச்சை பெறுமாறு சிறை நிர்வாகமும், தற்காலிக அரசும் பரிந்துரை செய்தன எனக் கூறியுள்ளார்.

### அப்பாவி மக்கள் அடித்துக் கொல்லப்படும் சம்பவங்கள்:

# உடன் தடுத்து நிறுத்த தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு மாநில அரசுகளுக்கு உத்தரவு

அப்பாவி மக்கள் அடித்துக் கொல்லப்படுகின்றமையைத் தடுத்து நிறுத்த வேண்டும். மாவட்டம் தோறும் சிறப்பு அதிகாரி, கண்காணிப்புக் குழு அமைத்து இவ்வாறான சம்பவங்களை தடுக்க வேண்டும் என்று மாநில அரசுகளுக்கு மத்திய அரசு அதிரடி உத்தரவு பிறப்பித்து உள்ளது.

இந்திய முழுவதும் பசுக்கள் கடத்தல், குழந்தைகள் கடத்தல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களை கூறி, சமூக வலைத்தளங்கள் வாயிலாக வதந்திகளை பரப்பி, வன்முறையில் ஈடுபடுவதும், அப்பாவி மக்கள் தாக்கப்படுவதும், அடித்துக் கொல்லப்படுவதும் அதிகரித்து வருகின்றன.

குறிப்பாக பசுக்காவலர்கள் என்ற பெயரில், பசுவை கடத்துகிறார்கள், பசுவை இறைச்சிக் காக அடித்துக்கொல்கிறார்கள் என்று கூறி அப்பாவி மக்களை அடித்துக் கொல்லும் சம்பவங்கள், வட மாநிலங்களில் அதிகளவில் நடந்து வருகின்றன.

இது தொடர்பான ஒரு வழக்கை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா தலைமையிலான அமர்வு கடந்த 17 ஆம் திகதி விசாரித்தது. அப்போது நீதிபதிகள், பசு பாதுகாவலர்கள் என்ற பெயரில் யாரும் சட்டத்தை தங்கள் கையில் எடுத்துக் கொள்வதை மத்திய, மாநில அரசுகள் அனுமதிக்கக் கூடாது. இதை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்க வேண்டும். இது போன்ற குற்றங்களைத் தடுப்பதற்கு மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என உத்தரவிட்டனர்.

இதையடுத்து மத்திய அரசு அதிரடியில் இறங்கி உள்ளது.

அப்பாவி மக்கள் அடித்துக் கொல்லப்படுவதை தடுப்பதற்கு, ஒவ்வொரு மாவட்டத்திலும் பொலிஸ் அத்தியட்சகர் அந்தஸ்து அதிகாரியை சிறப்பு அதிகாரியாக நியமிக்க வேண்டும்; இது தொடர்பான உளவுத் தகவல்களை சேகரிக்கவும், சமூக வலைத் தளங்களை கண்காணிக்கவும் சிறப்பு பணி குழுக்களை அமைக்க வேண்டும். இதன் மூலம் அப்பாவி மக்கள் அடித்துக் கொல்லப்படுகின்றமையைத் தடுக்க வேண்டும் என்று மாநில அரசுகளுக்கும், யூனியன் பிர தேசங்களுக்கும் மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பான கடிதத்தை மத்திய உள்துறை அமைச்சகம் அனுப்பி வைத்துள்ளது.

மேலும், இதன் பேரில் நடவடிக்கை எடுத்து, அதை மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு தெரிவிக்க வேண்டும் என்று கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

அதில், அப்பாவி மக்கள் அடித்துக்கொல்லப்படுவதை தடுக்க உச்சநீதிமன்ற உத்தரவை கண்டிப்புடன் அமல்படுத்த வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

அப்பாவி மக்கள் அடித்துக் கொல்லப்படும் சம்பவங்களை தடுத்து நிறுத்துவது குறித்து சட்டம் ஒன்றை இயற்றலாமா என்று பரிசீலிக்க மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் மத்திய அமைச்சர்கள் குழு அமைக்கப்பட்டுள்ள நிலையில், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே இந்த விவகாரம் நாடாளுமன்ற மக்களவையில் நேற்று முன்தினம் எதிரொலித்தது. இந்தப் பிரச்சினையை காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே எழுப்பினார்.

அப்போது அவர், அப்பாவி மக்கள் அடித்துக்கொல்லப்பட்ட சம்பவங்கள் குறித்து உச்சநீதிமன்ற நீதிபதி ஒருவரது தலைமையில் விசாரணை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அதற்கு மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பதில் அளித்தார். அப்போது அவர், பல்வேறு மாநிலங்களிலும் அப்பாவி மக்கள் அடித்துக்கொல்லப்பட்ட சம்பவங்களை மத்திய அரசு தீவிரமாக எடுத்துக்கொண்டு உள்ளது. தேவைப்பட்டால் இதற்காக புதிய சட்டம் இயற்ற அரசு தயாராக இருக்கிறது என்று கூறியுள்ளார். (க)

## 3 மாடி கட்டடம் இடிந்தது; அதில் சிக்கி ஒருவர் பலி



மகாராஷ்டிரா மாநிலம் பிவண்டியில் மூன்று மாடிக் கட்டடம் இடிந்து விழுந்த விபத்தில் ஒருவர் பரிதாபமாக பலியானார். மேலும் 6 பேர் உயிருடன் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

மகாராஷ்டிரா மாநிலம் மும்பையின் பிவண்டி பகுதியை சேர்ந்த ரசூல்பாக் என்ற இடத்தில் நேற்று முன்தினம் இரவு மூன்று மாடிக் கட்டடம் ஒன்று திடீரென இடிந்து விழுந்தது.

இந்த விபத்தில் கட்டட இடிபாடுகளில் பலர் சிக்கிக் கொண்டனர் என முதல் கட்டமாக தெரிவித்தனர். தகவல் அறிந்து தீயணைப்புத் துறையினர் மற்றும் தேசிய பேரிடர் மீட்புக் குழுவினர் அங்கு விரைந்து சென்றனர்.

அவர்கள் கட்டட இடிபாடுகளில் இருந்து 6 பேரை உயிருடன் மீட்டனர். மேலும், இடிபாடுகளில் சிக்கி ஒருவர் பரிதாபமாக பலியானார் என மீட்புக்குழு அதிகாரிகள் தெரிவித்தனர். தொடர்ந்து அங்கு கட்டட இடிபாடுகளை அகற்றும் பணிகளில் மீட்புக் குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

## உகண்டா மக்களுக்கு புற்றுநோய் சிகிச்சைக்கு நவீன கருவி

### அந்நாட்டுக்குச் சென்றுள்ள பிரதமர் மோடி அறிவிப்பு





உகண்டா மக்களுக்கு இந்தியாவின் அன்பளிப்பாக புற்றுநோய் சிகிச்சைக்கான அதிநவீன கருவி வழங்கப்படும் என பிரதமர் நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயமாக உகண்டா சென்ற பிரதமர் நரேந்திர மோடிக்கு அந்நாட்டின் மத்திய பகுதியில் உள்ள கடற்கரை நகரமான எண்டெபே நகர விமான நிலையத்தில் உகண்டா ஜனாதிபதி யோவேரி முசெவேனி தலைமையில் முப்படையினர் அணிவகுப்புடன் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர் இருநாடுகளின் உறவுகளை பலப்படுத்துவது தொடர்பாக மோடி – யோவேரி முசெவேனி பேச்சு நடத்தினர். அப்போது, இந்தியா - உகண்டா இடையில் 4 புதிய ஒப்பந்தங்கள் கையொப்பமாகின.

மேலும், இராணுவ ஒத்துழைப்பு, விசா நீடிப்பு, கலாசார பரிவர்த்தனை தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் ஏற்படுத்தப்பட்டன.

உகண்டாவுக்கு நீண்டகால கடனாக 20 கோடி அமெரிக்க டொலர்களும், ராணுவத்தினர் மற்றும் பொது மக்களின் பயன்பாட்டுக்காக அம்புலன்ஸ் மற்றும் இதர வாகனங்கள் அளிக்கப்படும் என பிரதமர் மோடி அறிவித்துள்ளார்.

மேலும், உகண்டா தலைநகர் கம்பாலாவில் உள்ள புற்றுநோய் சிகிச்சை மையத்துக்கு இந்தியாவின் அன்பளிப்பாக புற்றுநோய் சிகிச்சைக்கான அதிநவீன கருவி அன்பளிப்பாக வழங்கப்படும். இதன் மூலம் கிழக்காபிரிக்காவில் உள்ள இதர நாட்டு மக்களும் பயனடைவார்கள் என அவர் குறிப்பிட்டார்.

உகண்டா நாடாளுமன்றத்தில் சிறப்புரையாற்றும் மோடிக்கு எண்டெபி நகரில் உள்ள அரசு விருந்தினர் மாளிகையில் உகண்டா ஜனாதிபதி யோவேரி முசெவேனி விருந்து அளிக்கிறார். உகண்டாவில் இருந்து விடைபெற்று செல்லும் மோடி இன்று ஜோகனஸ்பர்க் நகரில் நடைபெறும் 'பிரிக்ஸ்' உச்சி மாநாட்டில் பங்கேற்கிறார். (க)

## நாடாளுமன்ற தேர்தலில் காங். 3 ஆம் இடத்துக்கு தள்ளப்படும்

### அமைச்சர் அருண் ஜெட்லி கருத்து

நாடாளுமன்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி 3 ஆம் இடத்துக்கு தள்ளப்படும், மாநில கட்சிகள் கூட்டணி, எதிர்க்கட்சி அந்தஸ்தை பெறும் என்று அருண் ஜெட்லி கூறினார்.

மத்திய அமைச்சஅருண் ஜெட்லி தனது முகநூல் பக்கத்தில் ஒரு கட்டுரை வெளியிட்டுள்ளார். அதில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்–

2019 ஆம் ஆண்டு நாடாளுமன்ற மக்களவை தேர்தல், தங்களுக்கான தேர்தல் இல்லை என்பதை காங்கிரஸ் தலைவர்கள் புரிந்து கொண்டுள்ளனர். பிரதமருக்கும், அவருடைய போட்டியாளர்களுக்கும் இடையிலான புகழ் இடைவெளி மிகப்பெரிதாக உள்ளது.

மொத்த மக்களவை தொகுதிகளில் 50 சதவீத தொகுதிகள் உள்ள உத்தர பிரதேசம், பீகார், மேற்கு வங்காளம் உள்ளிட்ட மாநிலங்களில் காங்கிரஸ் கட்சி இல்லவே இல்லை. அல்லது, 3 ஆவது, 4 ஆவது இடத்தில் உள்ளது. எனவே, காங்கிரஸ் கட்சி மொத்தம் 225 தொகுதிகளில்தான் போட்டியிடும் நிலையில் உள்ளது. அங்கெல்லாம் பா.ஜனதாவுடன் தான் நேரடி போட்டி நிலவும்.

எனவே, தேர்தல் முடிவில், காங்கிரஸ் கட்சி 3 ஆவது இடத்துக்கு ஓரம் கட்டப்படும். மாநில கட்சிகள் அடங்கிய கூட்டாட்சி முன்னணி, எதிர்க்கட்சி அந்தஸ்தை கைப்பற்றும்.

காங்கிரஸ் கட்சி, ஊழல் புகாரில் சிக்கித் தவித்த கட்சி. ஆனால், பிரதமர் மோடியோ ஊழலற்ற ஆட்சியை தந்து வருகிறார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## திருப்பதியில் தலைமுடி காணிக்கை செலுத்துவோருக்கு நாற்காலி வசதி



திருப்பதியில் தலைமுடி காணிக்கை செலுத்தும் பக்தர்களுக்கு நாற்காலி வசதி ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

திருப்பதியில் தினமும் 30 முதல் 34 ஆயிரம் பக்தர்கள் வரை தங்களது தலைமுடியை நேர்த்திக் கடனாக காணிக்கை செலுத்தி வருகின்றனர்.

திருமலையில் இதற்காக 18 இடங்களில் கல்யாண கட்டா உள்ளது. மேலும், பக்தர்கள் தங்கும் விடுதிகளிலும் இந்த வசதி செய்து தரப்பட்டுள்ளது.

இவ்வாறு பக்தர்கள் செலுத்தும் தலைமுடியை ஒவ்வொரு மாதமும் தேவஸ்தானம், டெண்டர்கள் மூலம் ஏலம் விடுகிறது. இதன் மூலம் ஆண்டுக்கு சுமார் ரூ.11 முதல் 12 கோடி வரை தேவஸ்தானத்திற்கு வருமானம் கிடைத்து வருகிறது.

கல்யாண கட்டாவில் தலைமுடி காணிக்கை செலுத்துவோருக்கு, அங்கேயே குளிக்கவும், உடை மாற்றும் அறைகளையும் தேவஸ்தானம் கட்டிக் கொடுத்துள்ளது.

ஆதலால், ஏராளமான பக்தர்கள் தங்களது குடும்பத்துடன் வந்து தலைமுடி காணிக்கை செலுத்துகின்றனர். ஆனால், சமீபத்தில் நடந்த குறைகேட்கும் நிகழ்ச்சியில், தலைமுடி காணிக்கை செலுத்த வரும் பக்தர்கள் கீழே உட்காருவதால் சங்கடமாக உள்ளதாகவும், குறிப்பாக, மாற்றுத்திறனாளி பக்தர்கள், முதியோர், பெண்கள் ஆகியோர் கீழே உட்கார்ந்து தலைமுடி காணிக்கை செலுத்த சங்கடப்படுவதாக பக்தர்கள் தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து, அறங்காவலர் குழுத் தலைவர் புட்டா சுதாகர் யாதவ் கல்யாண கட்டாவில் ஆய்வு செய்தார். அதை அடுத்து முதியோர், மாற்று திறனாளிகளுக்காக நாற்காலி வசதி செய்து கொடுக்க தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி, நேற்று முன்தினம் முதல் கல்யாண கட்டாவில் நாற்காலி வசதி அமைக்கப்பட்டது. இதற்கு பக்தர்களிடையே நல்ல வரவேற்பு இருக்கின்றமையால், விரைவில் கூடுதல் நாற்காலிகள் அமைக்கப்படும் என புட்டா சுதாகர் யாதவ் உறுதியளித்தார்.

தற்போது ஒவ்வொரு கல்யாண கட்டாவிலும் 5 நாற்காலிகள் போடப்பட்டுள்ளன.

## விக்கியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான தமிழரசுக் கட்சியினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இந்தச் சதி முயற்சிகள் தொடர்பில தமது கட்சி விழித்துக் கொண்டதால் முதல்வருக்கான ஆதரவைத் தொடர்ந்தும் வழங்கி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று மதியம் தம் நடத்திய சமகால அரசியல் நிலைமைகள் குறித்தான ஊடக சந்திப்பின் போதே விந்தன் கனகரத்தினம் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு மாகாண சபையின் 38 உறுப்பினர்களில் தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் 30 உறுப்பினர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். ஆனாலும் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கிடையே தொடர்ச்சியாக ஒற்றுமையீனம் காணப்பட்டே வருகின்றது. இதனால் ஏற்பட்ட பிரச்சினைகளைக் கட்சித் தலைமைகள் கவனத்திலெடுத்து ஆரம்பத்திலேயே வழி நடத்தியிருக்க வேண்டும்.

கட்சித் தலைமைகள் அவ்வாறு செய்யாதமையால் இன்றைக்கும் பலரும் பல வழிகளில் நின்று கொண்டு செயற்படுகின்றனர். இதனாலேயே இன்றைக்கு மாகாண சபையில் இக்கட்டானாதொரு நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இதிலும் குறிப்பாக மக்களுக்காகச் செயற்பட்டு வருகின்ற முதலமைச்சரை வீழ்த்த வேண்டும் என்றும் அவரை அரசியலில் இருந்தே ஒதுக்க வேண்டுமென்றும் ஒரு தரப்பினர் மிகத் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர்.

அதனடிப்படையில் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையையும் கொண்டு வந்திருந்தனர். அவ்வாறு கூட்டமைப்பிலிருக்கின்ற தமிழரசுக் கட்சி எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்திருந்த போது கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய கட்சிகள் முதலமைச்சருக்கு ஆதரவைத் தெரிவித்து அந்த முயற்சியைத் தோற்கடித்திருந்தன.

இதே போன்றே தற்போதும் முதலமைச்சருக்கு எதிரான நடவடிக்கைகள் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனை எதிர்க்கட்சியினர் யாரும் செய்யவில்லை. கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான தமிழரசுக் கட்சியே செய்கின்றது. அதிலும் டெனிஸ்வரனின் அமைச்சர் விடயத்தில் ஆளுநர் இழைத்த தவறை முதலமைச்சர் இழைத்த தவறாக சித்திரித்து முதலமைச்சரை வீழ்த்துவதற்கு முயற்சிக்கின்றனர்.

இவ்வாறு முதலமைச்சருக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு சதி நடவடிக்கையையும் நாம் விளங்கிக் கொண்டுள்ளோம். அதனாலேயே முதலமைச்சருக்கு எதிராக தமிழரசுக் கட்சியினர் முன்னெடுக்கின்ற ஒவ்வாரு நடவடிக்கைக்கும் எதிராகவும் நாம் செயற்பட்டு வருகின்றோம். ஆகவே எமக்கிருக்கின்ற குறுகிய காலத்தில் ஒருவரை ஒருவர் வீழ்த்துவதற்கோ அல்லது ஒதுக்குவதற்கோ முயற்சிக்காமல் இருக்கின்ற காலத்தில் முடிந்தவற்றை மக்களுக்குச் செய்து கொடுக்கும் வகையில் பயணிக்க வேண்டும்.

விக்கினேஸ்வரனுக்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களோ அல்லது வசைபாடல்களோ எவையானலும் அவை அவரின் தனிப்பட்ட அல்லது அவர் சார்ந்த தமிழரசுக் கட்சியின் கருத்தாவே அமையுமே ஒழிய, ஒட்டு மொத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்தாக அமையாது.

முதலமைச்சரை அழைத்து, மாலை போட்டு வரவேற்று, இங்கு கொண்டு வந்துவிட்டு, இப்போது அவருக்கு எதிரானவேலையை சுமந்திரன் போன்றவர்கள் செய்கின்றமை பெரும் அநாகரிகம்.

விக்கினேஸ்வரனை வீழ்த்த வேண்டும் அல்லது ஒதுக்க வேண்டுமென்பதற்காகவே தமிழரசுக் கட்சியினர் செயற்பட்டு வருகின்றனர். அதற்கமையவே முதலமைச்சருக்கு எதிரான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கமையவே முதலமைச்சர் மீது தற்போதும் பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர்.

விக்கினேஸ்வரனைக் கொண்டு வருவதில் அவரது மாணவனும் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த வருமான சுமந்திரன் முன்னின்று உழைத்திருந்தார். அவ்வாறு மாலை போட்டு வரவேற்றுக் கொண்டு வந்து முதலமைச்சராக்கிவிட்டு, அவரைச் செருப்பால் அடிப்பது போன்ற அநா

பக்கம் 03 >>>

## தொலைத்தொடர்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடத்தி செப்பு வயரை அறுக்க முயன்ற மூன்று திருடர்களை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மீசாலை வடக்கு வீரகத்திப் பிள்ளையார் கோவில் காணியில் பிரபல தனியார் தொலைத் தொடர்பு நிறுவனத்தின் தொலைத்தொடர்புக் கோபுரம் ஒன்று அமைந்துள்ளது. நேற்று முன் தினம் மதியம் ஒரு மணியளவில் அந்தக் கோபுர வளவில் ஓட்டோவில் வந்த மூவர் நின்றுள்ளனர். அவர்களின் நடவடிக்கைகளில் சந்தேகம் கொண்ட அயலவர்கள் அவர்களை விசாரித்துள்ளனர். இதன்போது தாம் தொலைத் தொடர்புக் கோபுரத் திருத்தப் பணியாளர்கள் என அவர்கள் தெரிவித்துள்ளனர். எனினும் அவர்கள் கோபுர வளவின் நுழைவாயிலூடாக உள்நுழையாமல் வேலி பிரித்து உள்நுழைந்தமையைக் கண்ட அயலவர்கள் மூன்று பேரையும் தாக்க முற்பட்டபோது தாம் கோபுரத்தில் பொருத்தப்பட்டிருந்த செப்பு வயரை களவாட வந்தமையைத் தெரிவித்துள்ளனர். இதையடுத்து உடனடியாக சாவகச்சேரிப் பொலிஸாருக்கும் அந்த தொலைத்தொடர்பு நிறுவனத்துக்கும் அயலவர்கள் அறிவித்துள்ளனர். அங்கு வந்த பொலிஸார் 3 பேரையும் கைது செய்தனர்.

மின்னல் தாக்கத்தில் இருந்து பாதுகாக்கச் சுமார் 75 மீற்றர் உயரமான கோபுர உச்சியில் இருந்து நிலத்துக்குள் கீழ் வரை பொருத்தப்படும் – ஒரு மீற்றர் சுமார் 6000 ரூபா பெறுமதியான – உயர்ந்த செப்பு வயரையே அவர்கள் திருட முற்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாகத் தொலைத்தொடர்பு நிறுவன அதிகாரிகளும் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். (ஐ-7)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற வருடாந்த பரிசளிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பிள்ளையைப் பெறுவது மட்டும் தாய்தந்தையருடையகடமையாக இருக்க முடியாது. மாறாகப் பெற்ற பிள்ளைகளுக்கு நல்ல கல்வியைக் கொடுத்து நல்ல பழக்க வழக்கத்தைச் சொல்லிக்கொடுத்து, சமுதாயத்தில் சிறந்தவர்களாக உருவாக்குவதே அவர்களின் பிரதான கடமையாகும்.

உணவு, உடை, மருந்து கொடுத்துப் பிள்ளைகளை வளர்ப்பது மட்டும் அவர்களின் செயலாக அமையக்கூடாது. பிள்ளைகளைப் பாடசாலைக்கு ஒழுங்காக அனுப்பவேண்டும். அவர்களின் கல்வி தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். சரியாக வழிகாட்ட வேண்டும்.

கணிதம், விஞ்ஞானம் உட்பட பாடங்களில் சித்தி எய்துவதற்கு அப்பால் அவர்களுக்கு நல்லதை, கெட்டதைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். வளர்ந்த பின்னர் தாய் தந்தையைக் கவனிக்காது, தான் பிறந்த நாட்டிற்கும் ஊருக்கும் சேவை செய்யாது, படித்துப் பெரியாளாக இருந்தும் பயனில்லை.

பிறந்த ஊரில் எல்லா வசதிகளையும் பெற்று கல்வி கற்று வெளியேறிச் சொந்த ஊரை விட்டு சென்று வெளிப் பிரதேசங்களில் போய் பலர் வேலை செய்கின்றார்கள். வடக்கு மாகாணத்தில் பல வைத்தியசாலைக்கு நான் சென்றபோது அங்கே வைத்தியர்கள் பற்றாக்குறை காணப்படுகின்றது. ஆனால் தென்னிலங்கையில் இங்கே இருந்து சென்ற வைத்தியர்கள் வேலை செய்கின்றார்கள்.

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட, கணவனை இழந்த, சகோதரனை இழந்த, தாய் தந்தையை இழந்த ஏழை மக்கள் இங்கே இருக்கின்றார்கள். படித்த, பணம் அதிகம் உள்ளவர்கள் எல்லாரும் சொந்த ஊரை விட்டு வெளிநாட்டுக்கு போயிருக்கின்றார்கள்.

தமிழ் அரசியல்வாதிகளுக்குள் இருக்கின்ற முரண்பாடுகள் மக்களுக்கு அபிவிருத்தியை – சேவையை ஒருபோதும் கொண்டு வரா. இவர்கள் மத்தியில் காணப்படும் முரண்பாடுகளால் சாதாரண மக்கள் பாதிக்கப்படுகின்றார்கள். மக்களின் அபிவிருத்திக்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

முஸ்லிம் அரசியல்வாதிகளை நீங்கள் பாருங்கள். அவர்கள் இந்த நாட்டில் எந்த கட்சி ஆட்சிக்கு வருகின்றதோ அதோடு இணைந்து தமது பிரதேசங்களுக்கும் தமது மக்களுக்கும் பாரிய அபிவிருத்தியை கொண்டு வந்திருக்கின்றார்கள். தமிழ் அரசியல் தலைவர்கள் தமக்குள் முரண்பட்டுக் கொண்டு எதிர்ப்பு அரசியலை நடத்திக் கொண்டு இருக்கின்றார்கள். – என்றார். (ஐ)

## சிங்களத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

கூட்டமைப்பானது ஐக்கிய தேசியக் கட்சியின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவே செயற்படுவதாக இதன்போது குற்றம் சுமத்திய கஜேந்திரகுமார் பொன்னம்பலம், புதிய அரசமைப்பில் ஒற்றையாட்சி முறைமைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மறைமுகமான ஆதரவைவழங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

புதிய அரசமைப்பு என்பது ஒற்றையாட்சியை ஏற்படுத்துவதற்கான முயற்சியே எனப் பல தடவைகள் தெரிவித்து வந்தோம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசிய கட்சியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து ஒற்றையாட்சிக்கான ஓர் அரசமைப்பினையே உருவாக்கி வருகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஐக்கிய தேசியக் கட்சியின் நிகழ்ச்சி நிரலின்படி செயற்படுகின்றார்கள் என்பது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை போன்ற விடயங்களில் வெளிப்படையாகத் தெரிய வந்துள்ளது – என்றார். (ஐ-7)

## சாவகச்சேரிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாவகச்சேரி – சங்கத்தானை – மீனாட்சி அம்மன்கோவில் வீதியில் அமைந்துள்ள வீடொன்றினுள் நேற்று முன் தினம் இரவு 11.30 மணியளவில் புகுந்த வாள் வெட்டுக்குழுவினர் 55 வயதுடைய மாணிக்கம் சிவராசா என்பவரை வெட்டிக்காயப்படுத்தியுள்ளனர். தலையில் படுகாயமடைந்த அந்த வயோதிபர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவளை, மீசாலை மேற்கில் அமைந்துள்ள வீடொன்றினுள் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் புகுந்த வாள் வெட்டுக்குழுவினர் குடும்பப் பெண் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்றமையோடு குடும்பத் தலைவரான 53 வயதுடைய சின்னையா சுப்பிரமணியம் என்பவர் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். குடும்பத் தலைவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவங்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ஐ-7)

## கல்விசார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிடப்பட்டிருந்த பணிப்புறக்கணிப்புப் போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் வழங்கப்பட்ட உறுதிமொழியை அடுத்தே போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டதாக இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

இலங்கை கல்வித்துறையில் அரசியல் பழிவாங்கல் நியமனம் எனும் போர்வையில் தகுதியற்றவர்கள் 1000 இற்கும் அதிகமானவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படவுள்ளன என்று குற்றஞ்சாட்டி ஆசிரியர் சங்கம் உள்பட கல்விசார் தொழிற்சங்கங்கள் கடந்த 4ஆம் திகதி சுகயீன லீவுப் போராட்டத்தில் ஈடுபட்டன.

எனினும் வடக்கு – கிழக்கு உள்பட நாடு முழுவதும் இந்தப் போராட்டம் பெரியளவில் வெற்றியளிக்கவில்லை.

இந்த நிலையில் இன்று மீண்டும் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட அதிபர் மற்றும் ஆசிரியர் சங்கள் தயாராகின.

கல்விசார் தொழிற்சங்கங்களின் இந்த முடிவால் பாடசாலைகளில் தற்போது இடம்பெற்று வரும் இரண்டாம் தவணைப் பரீட்சைகள் பாதிப்படையும் என கல்வி அமைச்சு சுட்டிக்காட்டியிருந்தது.

கல்விசார் தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடையே நேற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்றன.

இதன்போது கல்விசார் ஊழியர்களின் பிரச்சினைகள் மற்றும் தொழிற்சங்களின் பரிந்துரைகளை நிறைவேற்றுவது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி உறுதிமொழி வழங்கினார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## மரணதண்டனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கும் நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பின் போது அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மரணதண்டனையை நடைமுறைப்படுத்தினால் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. வரிச் சலுகை இல்லாமல் போகுமா என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், எந்தச் சலுகை இல்லாமல் போனலும் மரணதண்டனையை நடைமுறைப்படுத்துவதில் ஜனாதிபதி மிக உறுதியுடன் இருக்கிறார் எனத்தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் வியாபாரத்திற்குத் துணையாக இருக்கும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு எதிராகவும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அதிபர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நேற்றுப் பணித்தார்.

கல்விசார் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கு ஜனாதிபதிக்கும் இடையே நேற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்றன.

இலங்கைக் கல்வித்துறையில் அரசியல் பழிவாங்கல் நியமனம் எனும் போர்வையில் தகுதியற்றவர்கள் 1000 இற்கும் அதிகமானவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படவுள்ளன என்று கல்விசார் தொழிற்சங்கங்கப் பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தனர்.


அந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் விரிவான விசாரணையை முன்னெடுப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

விசாரணைகள் நிறைவு பெறும் வரை இலங்கை அதிபர் சேவை, ஆசிரியர் சேவை நியமனங்களை இடைநிறுத்தி வைக்கக் கல்வி அமைச்சுக்கு உத்தரவிடுவதாகவும் ஜனாதிபதி மைத்திரிபால உறுதியளித்தார்.

ஜனாதிபதியின் இந்த உறுதிமொழியை அடுத்தே கல்விசார் தொழிற்சங்கங்களின் போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்தது.

இந்த நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை தொலைபேசி ஊடாகத் தொடர்புகொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அதிபர் மற்றும் ஆசிரியர் சேவை நியமனங்களை மறு அறிவித்தல் வரை இடைநிறுத்துமாறு பணிப்புரை விடுத்தார் என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்தது. (ஐ)

# வில்லியனுக்கு விலை பேசும் பார்சிலோனா



பார்சிலோனா உதைபந்தாட்ட அணி 65 மில்லியன் பவுண்ட்ஸ் கொடுத்து செல்சி அணியின் வீரர் வில்லியனை வாங்க விருப்பம் தெரிவித்தது. இருப்பினும் பார்சிலோனா அணி அதனை நிராகரித்துள்ளது.

பிரேசில் உதைபந்து அணியின் முன்னணி மிட்பீல்டர் வில்லியன். இவர் இங்லீஷ் பிரீமியர் தொடரில் செல்சி அணிக்காக விளையாடி வருகிறார். இவரை 'லா லிகா' புகழ் பார்சிலோனா அணி வாங்க விருப்பம் தெரிவித்து செல்சி அணிக்கு தூதுவிட்டது. இருப்பினும் செல்சி அணியினர் அந்தக் கோரிக்கையை நிராகரித்து விட்டனர்.

இது தொடர்பில் செல்சி அணியினின் பயிற்சியாளராகப் பொறுப்பேற்றுள்ள மவுரிசியோ குறிப்பிடுகையில்,

வில்லியனை விட்டுக் கொடுக்க விருப்பம் இல்லை. இதனால் 65 மில்லியன் பவுண்ட்டை நிராகரித்து விட்டோம். ஒருவேளை 70 மில்லியன் பவுண்ட்ஸ் கொடுத்தால் அவர்களது கோரிக்கையை ஏற்றுக் கொள்வது தொடர்பாக யோசிப்போம் என்றார்.

29 வயதாகும் வில்லியன் கடந்த 2013 ஆம் ஆண்டிலிருந்து செல்சி அணிக்காக விளையாடி வருகிறார். இதுவரை 166 போட்டிகளில் விளையாடி 25 கோல் அடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை கிரிக்கெட் அணிக்கு புதிய முகாமையாளராக சரித் தெரிவானார்



இலங்கை கிரிக்கெட் அணிக்கு புதிய முகாமையாளரை தெரிவு செய்துள்ளதாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணியின் புதிய முகாமையாளராக சரித் சேனநாயக்க தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இம்மாதம் 25 ஆம் திகதி முதல் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை இவர் முகாமையாளராக கடமையாற்றுவார் என இலங்கை கிரிக்கெட் நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

# மீண்டும் மத்தியுஸ்



தென்னாபிரிக்க அணியுடனான ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ள இலங்கை அணியை தெரிவுக்குழுவினர் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளனர்.

இதன்படி இந்த அணிக்கு அஞ்சலோ மத்தியுஸ் தலைமை தாங்குவார் என்றும் தெரிவுக்குழுவினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி இலங்கை அணியுடன் இரண்டு டெஸ்ட் போட்டிகள், ஐந்து ஒரு நாள் போட்டிகள் மற்றும் ஒரு இருபதுக்கு 20 போட்டி ஆகியவற்றில் விளையாடி வருகின்றது.

இதில் முதலாவதாக நடைபெற்று முடிந்த இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை இலங்கை அணி 2:0 என்ற கணக்கில் வெற்றியீட்டி கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இந் நிலையில் ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டி எதிர்வரும் 29 ஆம் திகதி தம்புள்ளை கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. இரண்டாவது போட்டி எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி அதே மைதானத்திலும், தொடரின் மூன்றாவது போட்டி ஆகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி கண்டி, பல்லேகல கிரிக்கெட் மைதானத்திலும் நான்காவது போட்டி 8 ஆம் திகதி அதே மைதானத்திலும் இடம்பெறவுள்ளதுடன் ஐந்தாவதும் இறுதியுமான போட்டி கொழும்பு, ஆர்.பிரேமதாஸ கிரிக்கெட் மைதானத்தில் 12 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்த ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் அஞ்சலோ மத்தியுஸ் தலைமையிலான இலங்கை அணி சார்பாக தசுன் சானக்க, குசல் ஜனித் பெரேரா, தனஞ்சய டிசில்வா, உபுல் தரங்க, குசல் மெண்டீஸ், திஸ்ஸர பெரேரா, நிரோன் டிக்வெல்ல, சுரங்க லக்மல், லஹிரு குமார, கசுன் ராஜித, அகில தனஞ்சய, பிரபாத் ஜெயசூரிய, லக்ஷான் சந்தகன் மற்றும் செஹான் ஜெயசூரிய ஆகியோரின் பெயர்கள் உள்ளடக்கப் பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக திமுத் கருணாரத்ன, இசுரு உதான, நிரான் பீரிஸ் மற்றும் ஜெப்ரி வென்டர்ஸி ஆகிய வீரர்களின் பெயர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எங்கும் டோனி முதலிடம்தான்



அதிக வருமான வரி செலுத்தியோர் பட்டியலில் இந்திய அணியின் முன்னாள் தலைவர் மகேந்திரசிங் டோனி முதலிடத்தில் உள்ளார்.

இவ்வாண்டில் அவர் ரூபா 12.17 கோடியை வருமான வரியாக செலுத்தி பீகார் மற்றும் ஜார்க்கண்ட் மாநிலங்களில் அதிக வருமான வரி செலுத்தியவராக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

மகேந்திர சிங் டோனி இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் மட்டுமல்லாமல் தற்போது வரை விக்கெட் காப்பாளராக தனது அணிக்காகச் செயல்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பல்வேறு சாதனைகளைப் படைத்த மகேந்திர சிங் டோனிக்கு தற்போது 37 வயதாகின்றது டோனிக்கு வயதான காரணத்தினால் ஓய்வுபெறவுள்ளார் என பல சர்ச்சைகள் எழுந்துள்ளநிலையில் பீகார் மற்றும் ஜார்க்கண்ட் மாநிலங்களில், 2017 - 2018 நிதியாண்டில் அதிக வருமான வரி செலுத்தியவராக டோனி உள்ளார்.

அவர். 12.17 கோடி ரூபாயை வருமான வரியாக செலுத்தியுள்ளார். அதற்கு முந்தைய ஆண்டு அவர் ரூபா 10.93 கோடி செலுத்தினார். ஆனால், அந்த ஆண்டில் அதிக வரி செலுத்தியோரில் அவர் முதலிடத்தில் இல்லை. கிரிக்கெட் விளையாடுவதற்கான சம்பளத்தைத் தவிர, பல்வேறு விளம்பரங்கள் மூலம் டோனிக்கு வருமானம் கிடைத்து வருகிறது.

ஏற்கனவே 2013 -2014 நிதியாண்டிலும் பீகார், ஜார்க்கண்ட் மண்டலத்தில் அதிக வருமான வரி செலுத்தியோரில் முதலிடத்தில் டோனி இருந்தார்.

இதில் குறிப்பிடத்தக்க வேண்டிய விடயம் அதிக வரி செலுத்துவது என்பதல்ல தன் வருமானத்தை சரியாக கணக்கில் இட்டு வருமான வரியை சரியான முறையில் செலுத்தியமை என்பது மகேந்திர சிங் டோனிக்கு பெருமைக்குரிய விடயமாகும்

பல நடிகர்கள், விளையாட்டு வீரர்கள் என எல்லோரும் உரிய முறையில் வரி செலுத்தாமை உட்பட்ட வழக்கில் சிக்கிக்கொள்ளும் நிலையுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சிறந்த கால்பந்து வீரர் யார்?

சர்வதேச உதைபந்து சம்மேளனத்தில் சிறந்த வீரருக்கான இறுதிப் பட்டியலில், நட்சத்திர வீரர்களான கிறிஸ்டியானோ ரொனால்டோ, லயனல் மெஸ்ஸி மற்றும் பிரான்ஸ் அணியின் இளம் வீரரான கைலியன் மாப்பே ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

சர்வதேச உதைபந்து சம்மேளனத்தின் சிறந்த வீரருக்கான விருதை, கடந்த இரண்டு தடவைகளும் கிறிஸ்டியானோ ரொனால்டோ தன்வசப் படுத்தினார்.

சம்பியன்ஸ் லீக் உதைபந்து தொடரில் தொடர்ச்சியாக மூன்றாவது முறையாக, ரியல் மட்ரிட் அணி சம்பியன் பட்டம் வெல்வதற்கு கிறிஸ்டியானோ ரொனால்டோ உறுதுணையாக இருந்துள்ளார்.

எதிர்வரும் காலங்களில் ஜுவான்டஸ் கழக அணிக்காக ரொனால்டோ விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆர்ஜென்டினா அணியின் நட்சத்திர வீரரான லியோனல் மெஸ்ஸி, கடந்த நான்கு லா லிகா சீசன்களில் மூன்று முறை சம்பயின் பட்டம் வென்ற பார்சிலோனா அணிக்காக 34 கோல்கள் அடித்து, அதிக கோல்கள் அடித்த வீரர்கள் பட்டியலில் முதல் நிலையில் உள்ளார்.

19 வயதான பிரான்ஸின் கைலியன் மாப்பே, ரஷ்யாவில் நடைபெற்று முடிந்த உலகக்கிண்ண உதைபந்துத் தொடரில் சிறந்த முறையில் விளையாடி, பிரான்ஸ் அணி சம்பியன் பட்டம் வெல்வதற்கு பெரும் பங்களிப்பை வழங்கினார்.

அத்தோடு இந்தத் தொடரில் அவர் பல சாதனைகளையும் பதிவு செய்தார். அதில் குறிப்பாக உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் கோல் அடித்த இளம் வீரர் என்ற சாதனையை அவர் நிலைநாட்டினார். இதற்கு முன்னதாக 60 வருடங்களுக்கு முன்பு உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் பீலே கோல் அடித்திருந்தார்.

இதுதவிர கைலியன் மாப்பே, பரிஸ் செயிண்ட் ஜெர்மைன் கழக அணியின் நட்சத்திர வீரராகவும் திகழ்கிறார்.

மேலும், சர்வதேச உதைபந்து சம்மேளனத்தில் சிறந்த வீரருக்கான இறுதிப் பட்டியலில், பிரான்ஸின் நட்சத்திர வீரர்களான ஆன்டெய்ன் கிரீஸ்மன், ரபேல் வரேன் ஆகியோரும் 10 பேர் கொண்ட இறுதிப்பட்டியலில் இடம்பிடித்துள்ளனர்.

எனினும், பிரேஸில் மற்றும் பரிஸ் செயிண்ட் ஜெர்மைன் கழக அணியின் நட்சத்திர வீரரான நெய்மர், இந்தப் பட்டியலில் பரிந்துரை செய்யப்பட வில்லை.

# உயர் தேசிய டிப்ளோமா மாணவர்களின் மீது கண்ணீர்ப்புகைக் குண்டு, நீர்த்தாரை வீச்சு



நேற்று கொழும்பு கோட்டைப் பகுதியில் ஆர்ப்பாட்டம் நடத்திய உயர் தேசிய டிப்ளோமா (HND) மாணவர்களை பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டு வீசி, நீர்த்தாரைப் பிரயோகம் செய்து துரத்தியடித்தனர்.

சில கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டம் நடத்திய மாணவர்கள் ஜனாதிபதி செயலகம் நோக்கி செல்ல முயன்ற போதே லோட்டஸ் வீதிப் பகுதியில் வைத்து அவர்களைத் துரத்தியடித்தனர் பொலிஸார்.

# புதுக்குடியிருப்பு பயணித்த பஸ் வவுனியாவில் விபத்து



## 20 பேர் வரை படுகாயம்



வவுனியா, ஜூலை 25

கொழும்பிலிருந்து புதுக்குடியிருப்பு நோக்கி பயணித்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து, வீதியை விட்டு விலகி, வீதியோர மின்கம்பத்திலும், மரத்திலும் மோதி விபத்திற்குள்ளானதில் அதில் பயணித்த 20இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.


பஸ் மதவாச்சிக்கும் வவுனியாவுக்கும் இடைப்பட்ட புணாவப் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்தவேளை நேற்று அதிகாலை இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் காயமடைந்த பயணிகள் வவுனியா, மதவாச்சி வைத்தியசாலைகளில் அனுமதிக் கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்தில் சிக்கியவர்கள் பெரும்பாலும் புதுக்குடியிருப்பு, சிவநகர், யாழ்ப்பாணம் மற்றும் வற்றாப்பளை ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. சாரதி நித்திரைக் கலக்கத்தில் பஸ்ஸைச் செலுத்தியமையே விபத்திற்குக் காரணம் என ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ள நிலையில், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மதவாச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ஐ)

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் புகழ்பூத்த அதிபர்


## அமரர் எஸ்.பொன்னம்பலத்தின் அஞ்சலி நிகழ்வு



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் புகழ்பூத்த முன்னாள் அதிபர் எஸ்.பொன்னம்பலம் அவர்கள் இறைவனடி சேர்ந்தமையை ஒட்டியதற்கான அஞ்சலி நிகழ்வு இன்று (26.07.2018) வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறும். இந் நிகழ்வில் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், அபிமானிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**யாழ்.இந்துக் கல்லூரி**
**பழைய மாணவர்சங்கம், யாழ்ப்பாணம்.**

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
15.09.1936

மறைவு
23.07.2018

## சரவணமுத்து பொன்னம்பலம்

(முன்னாள் அதிபர் (1991), யாழ். இந்துக் கல்லூரி)

**இந்துவின் மைந்தனாம்**
**ஈடு இணையில்லா இரசாயனவியல் ஆசானாம்**
**இந்துவின் புகழ்பூத்த அதிபராம்**
**“பொன்னர்” என்ற பெருமகனார்**


மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.**

## மரண அறிவித்தல்

## சரவணமுத்து பொன்னம்பலம்

(முன்னாள் அதிபர், யாழ். இந்துக் கல்லூரி)



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் சரவணமுத்து பொன்னம்பலம் அவர்கள் 23.07.2018 திங்கட்கிழமை சிட்னியில் அவரது இல்லத்தில் இறைபதமடைந்தார்.

அன்னார் வைத்தியகலாநிதி குணபூபதி அவர்களின் அன்புக் கணவரும் கலாநிதி விசாகன் அவர்களின் பாசமிகு தந்தையும், திருமதி கோமதி விசாகன் அவர்களின் மாமனாரும், சேயோன், யுவன்,தாரிணி ஆகியோரின் பேரனும்,காலஞ்சென்ற சர்வேந்திரம் (அமெரிக்கா) மற்றும் சரோஜாதேவி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தர்மராஜா மற்றும் சந்திரவதனா (லண்டன்), வி.ஆர்.இரமணநாதன் மற்றும் விஜயலஷ்மி (லண்டன்), ஆனந்தகுமாரசுவாமி (லண்டன்), சிவபாலன் மற்றும் மஞ்சுளா (சிட்னி) ஆகியோரின் மைத்துனரும், அபிரா (லண்டன்), சரவணா (அமெரிக்கா), சங்கரா (அமெரிக்கா), ஆரணி (லண்டன்), பவான் (லண்டன்), தீபன் (லண்டன்), குகன் (லண்டன்), துளசி (சிட்னி), சொரூபன் (சிட்னி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 25.07.2018 புதன்கிழமை 101 South Street, Granville ல் அமைந்துள்ள Liberty Funeral இல் பிற்பகல் 6 மணியிலிருந்து 8 மணிவரை பார்வைக்கு வைக்கப்பட்டு 26.07.2018 வியாழக்கிழமை Memorial avenue, lidcome இல் அமைந்துள்ள South Chapel Rockwood மயனாத்தில் பிற்பகல் 12,30 மணியிலிருந்து பிற்பகல் 3.30 மணிவரை இறுதிக்கிரிகைகள் செய்யப்பட்டு பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

தகவல்:
திரு.கே.சிவபாலன் (மைத்துனர்)
+61 418 488 804
விசாகன் (மகன்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர் களது அச்சகத்தில் 26.07.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.